புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. ௨ ஆரம்பமானது: விரோதிஷு (1889) ஆவணிமீ ௨௮

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்"

இந்துசாதனம்

(SUPPLEMENT TO THE HINDU ORGAN.)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"என் கடன் பணிசேய்து கிடப்பதே"

புத்தகம்—௪௭ } யாழ்ப்பாணம்:— ௰வஷு ஆனிமீ ௯௨ (1935 ஜூன் 20 வியாழக்கிழமை.) { இலக்கம்—௨0

"சிவபூதத கருவிநா லுணர்ச்சி கேகைச்
சிவமூதத சகமாக மக்க ளோக்கப்
பாவபூதத புதல்சமய விருசக னீகப்
பரமபூதத சைவநீதி பாரோ ராகப்,
பேரபூதத வொளிக்கா னெனித தூக்கப்
பிறைபூதத சடைமவுலிப் பிரானா ரந்த
வாபூதத வதிவிச்சை சொறிலெ ரேறு
மதம்பூததகவிராயகன்றுன்வணக்கியாதுவாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
தாழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

கந்தரலங்காரம்.

தடக்கொற்ற வேண்மயி லேயிடர் தீரத் தனிவிடினீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

இ—ள் தடக்கொற்ற வேள் மயிலே—பரந்த வெற்றியைப் பூண்ட கந்தவேளின் வாகனமாக வுள்ள மயிலே; இடர் தீரத்தனிவிடினீ -(எனது பிறவிச்) துன்பம் ஒழியும்படி தனிமையாகிய (சுத்த அருள்) நிலையில் என்னைவைப்பையேல்; கடற்கு அப்புறத்தும்-சமுத்திரங்களுக்கு அப்பாலும்; கதிர்க்கு அப்புறத்தும்-சந்திர சூரிய மண்டலங்களுக்கு அப்பாலும்; கனகசக்ரத்திடர்க்கு அப்புறத்தும் - பொன் மயமான சக்கிரவாளகிரிக்கு அப்பாலும்; திசைக்கு அப்புறத்தும் - அட்டதிக்குகளுக்கு அப்பாலும்; வடக்கிற்கிரிக்கு அப்புறத்தும் - மேருமலைக்கு அப்பாலும்; நின்தோகையின் வட்டம் இட்டுத்திரிகுவை - உனது கலாபத்தினால் வட்டமிட்டுக்கொண்டு பறந்து திரிவாய் எ—று.

இது கந்தவேளின் வாகனமாகிய மயிலின் அருளை வேண்டியவாறும்.

மயில் வாகனமே திரோதானசக்தியாகிய உன்தொழில் அற்றால் தமியேன் முருகமூர்த்தியின் அருள் பெற்று ஈடேறல் முடியுமென்றபடி. (கூசு)

வாழ்க்கையில் வெறுத்துத் தற்கொலை செய்ய முயன்றான்.

கொழும்பு வியாபாரசங்கத்திற் சேவகனாகவிருந்த எட்வின் என்பவன் உலக வாழ்க்கையில் வெறுப்படைந்தானாய்த் தற்கொலை புரிய நிச்சயித்து நச்சுத் திராவகத்தைக் குடித்தான். அவன் செயலைக் கண்டோர் ஆபத்தான நிலைமையில் அவனை வைத்தியசாலையிற் கொண்டு போய்ச் சிகிச்சை செய்விக்கலாயினர்.

டெகிவலை மிருகக்காட்சிச் சாலை.

டெகிவலையிற் காட்சிக்கு விடப்பட்டிருக்கும் மிருகங்கள் பட்சிகள் நீர்வாழ்வன ஊர்வன எல்லாவற்றையும் அரசினர் தம் பொறுப்பில் வாங்குவதற்கு யோசிக்கின்றனராம்.

மாலைதீவு திகாரிகளும் இலங்கைத் தபால் தலைவரும்.

மாலைதீவிலிருந்து இந்தியாவுக்குப் போக வேண்டிய கடிதங்கள் கொழும்பு மூலமாய் முத்திரை குத்தி அனுப்பப்பட்டுவருகின்றனவாம். இதன் பொருட்டு மேற்படி தீவின் அதிகாரிகள் இலங்கைத் தபாற் தலைவருக்கு எவ்வகையான செலவையும் இற்றைவரையிற் கொடுக்கவில்லையாம். ஆனால் அவர்கள் ஏதும் செலவுகொடுக்க வேண்டுமென இலங்கைக் காகிதப்பகுதித் தலைவர் அரசினருக்கு எடுத்துக்காட்டியுள்ளாராம்.

புகையிரதப்பகுதித் தலைவரின் சுகவீனம்

இலங்கைப் புகையிரதப்பகுதித் தலைவரான மிஸ்டர் E. W. ஹெட் என்பவர் அதிக சுகவீனமாகக் கிடக்கின்றனரெனச் சமாசாரம் பிறக்கிறது.

கதிர்காம உற்சவம்.

பருத்தித்துறை பஞ்சாங்க கணிதர் பிரம ஸ்ரீ சோ, வைத்தியநாத சாஸ்திரிகள் பின்வருமாறு எழுதுகின்றார்:—

கதிர்காமப் பெரும:னுடைய உற்சவம் ஆடிமாதத்தில் நடைபெறுவது வழக்கமாதலாலும் நீர்த்தநினத்துக்குக் கொள்ளப்பட்டு வருகிற பூரணைத்திதியும் திருவோணநக்ஷத்திரமும் இந்த யுவவர்ஷத்தில் ஆடிமீ ௯0௯ பொருந்தி வருவதாலும் அத்தினத்தில் எங்கள்பஞ்சாங்கத்தில் கதிர்காம நீர்த்தம் குறிக்கப்பட்டது.

இந்த உற்சவத்தைக் கோயிலார் ஆனிமீ களக்ஷ (ஜூலாய்மீ 1௯) தொடங்கி ஆடிமீ உ௯க (ஜூலாய்மீ 17௯) நிறைவேற்றுவார்களென்று தெரியவருவதால், குறித்த உற்சவகாலத்தைத் தவறிடாது யாத்திரை செய்யும்படி உற்சவ தரிசனை முதலியவற்றுக்குச் செல்லும் புண்ணிய சீலர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

கதிர்காமதீர்த்தம் முக்கிக்கொள்ளப் படுதலால் அதை அடுத்துக் கொழும்பில் நடைபெறும் ஆடிவேலுற்சவமும் முக்தியே நடைபெறு மென்று தெரியவருகிறது.

காதலன் தவறியபின் கன்னிகையின் வாழ்வு.

—:*:—

ஏகாந்த வாழ்க்கையிற் காதலன் நினைவு.

இங்கிலாந்துச் சம்பவம்.

—0—

கோல்பிரோக்—ரோஇஸ்லிங்டன் என்ற இடத்தில் மிக இரகசியமாக 27 வருடமாக வசித்துவந்த மிஸ் தோடா யாலப் என்னும் காரிகை சமீபத்தில் மரணமடைந்துவிட்டாள். அவள் அருகாமையில் வசித்து வந்தவர்களுக்கு அவளது பெயரைத்தவிர அவளைப்பற்றி ஒன்றுமே தெரியவராது. அவளது அறையில் பொலிசார் பரிசோதனை செய்ததில் படுக்கையின் கீழ் சொக்கம் 735 பவுன்களும் சேவிங்ஸ் வங்கி உண்டியல்களும் காணப்பட்டன. மிஸ் தோடா அழகில் சிறந்த ஓர் மாது. அவள் ஒப்பாரை உடைதரித்து உலகம் முழுவதும் யாத்திரை செய்திருக்கிறாள். ஒரு தடவை அவள் ஒருவரைக் காதலித்ததாகவும் ஆனால் அவரை விவாகம் செய்ய முடியாமையால் அவரது நினைவைப் போற்றி தனது வாழ்க்கை முழுவதும் கன்னிகையாகவே இருந்துவந்தாளென்றும் தெரிகிறது. அவள் வசித்துவந்த வீட்டின் மேல்மாளிகையில் வசிப்பவரான மிஸ்டர் ஏ. எச் காய்ட் மிஸ் தோடா ஒருகால் ஓர் ஆடவரைச் சந்தித்ததாகவும், அவரை அவள் காதலித்ததாகவும் ஆனால் அவர்கள் மணந்துகொள்ள முடியாமையால் அவள் வாழ்க்கை முழுவதும் ஏகாந்தமாகவே வசித்துவந்தாள் என்றும் கூறினார். மரணவிசாரணை காரியாலயத்தார் அவளது உறவினர்களைப்பற்றி விசாரணை செய்துவருகின்றனர்.

பிறக்ரரும் கிளார்க்வேலையும்!

இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டதா?

—(*)—

அநுராதபுரத்து நகரசங்கவேலை.

அநுராதபுர நகரசங்கத்தில் ஓர் அற்ப கிளார்க்வேலை காலியாகவிருந்தது. அதற்கு 137 பேர் மநுக்கள் அனுப்பினர். அவர்களில் அநுராதபுரம் நீதிஸ்தலங்களில் ஏற்படும் பிறக்ரரும் ஒருவராம்.

இந்த 137 பேரையும் அநுராதபுரத்து மாகாண உதவித் தலைவர் ஓர் பரீட்சையின் மூலமாக அவர்களின் திறமையைப் பரிசோதனை செய்து 10 பேரைத் தெரிந்து எடுத்தனர். அவர்களில் கொழும்புச் சர்வகலாசாலையில் இன்ரர்ஸயன்ஸ் வகுப்பிற் படிக்கும் ஒருவர்க்கே ஈற்றில் இவ்வற்ப உத்தியோகம் ஏற்பட்டதாம்.

பொலிசாரை எதிர்த்துத்தாக்கியமை

கழுத்துறைப் பொலிஸ் உப பரிசோதகராகிய ஸ்ரீ இரத்தினராசாவும் சில பொலிசரும் பிஸ்க்காற் பியோன்மாரும் டிஸ்திறக்கோட் கட்டளைப்படி இஸ்மாலியென்னும் இஸ்லாமானவரின் இடத்திற்கு ஆட்சி பெடுக்கச்சென்றபோது, அப்துல்லா என்பவனும் நூற்றுக்கணக்கான வேறு பேரும் கத்தி பொல்லு இருப்புச் சலாகை முதலியவை பரித்தவராய்ப் பொலிசரை எதிர்த்துத் தாக்கி ஒரு பொலிசிற்கும் பிஸ்காற் சேவகர் மூவருக்கும் பாதுரமான ஊறு விளைத்தனர். அது கண்ட ஸ்ரீ இரத்தினராசா கழுத்துறை பொலிஸ் தலைவருக்குத் தெரிவிக்க, அவர் ஆயுதபாணிகளான சில பொலிசருடன் உடனே சென்று கலகத்தை அடக்கி எழுபேரைச் சிறைப்படுத்தினர்.

ஹிந்துக்களது கடமை.

லட்சியம் ஒன்று; வழிகள் பலவே!

தேசபக்தியும் மதப்பற்றும் கொண்ட "ஜாதியைச் சிருட்டிக்கவேண்டும்."

ஸாகிப்ஜீ மகாராஜா ஆநந்தசுரூபரும் பஞ்சாப் ஸ்தல ஸ்தாபன மந்திரியான சேர் கோகுலசந்திர நாரங்கும் ஸிம்லாவைச் சேர்ந்த காளிபாரி மண்டபத்தில் ஹிந்து மதத்திற்கு எப்படிச் சேவை செய்வது என்பதுபற்றிப் பேசினார்கள். ஸாகிப்ஜீ முதலில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உலகிலுள்ள எல்லா மதங்களுக்குள்ளும் ஒற்றுமையிருக்கிறது. அனைவரும் ஒரே கடவுளை வழிபடுகிறார்கள் என்னும் உண்மை இவ்வொற்றுமையை வளர்க்கவேண்டும்.

"ஹிந்து சமூகம் பல நூற்றாண்டுகளாக கீழ் நிலையடைந்து வந்திருக்கிறது. அது திடீரெனத் தன் பழைய நிலைமையை அடைந்துவிடமுடியாது. ஹிந்துக்கள் ஒரு அதிக ஹிந்துத் தலைவரைத் தேர்ந்தெடுத்து அவர் சொற்படி நடக்கவேண்டும். தேசபக்தியும் மதப்பற்றும் கொண்ட ஒரு ஜாதியை நாம் சிருஷ்டித்துவிடவேண்டும்."

சேர் நாரங் சொல்லியதாவது:— "ஹிந்துக்கள் முதன்முதலில் மனச்சோர்வை விட்டொழிக்க வேண்டும். ஹிந்துமதத்திலில்லாத உண்மைகளை வேறெந்த மதமும் போதிக்கவில்லை. ஹிந்துக்களுக்குள் நெருங்கிய ஆத்மார்த்த ஒற்றுமை இருந்து வருகிறது. கர்மாவிலும் கடவுளிடத்திலும் ஹிந்துக்களுக்குள்ள ஒரே திடமான நம்பிக்கைதான் இதற்குக் காரணம். வழிபடும் முறைகளில் மாத்திரமே வித்தியாசமிருந்து வருகிறது. லக்ஷியம் ஒன்று, வழிகள் பல."

இறைவர்கள் இயம்பிய இன்கவிகள்

(பண்டிதர் திரு. கா பொ. இரத்தினம்)

"ஆயுந்தொறும் தொறும் இன்பந் தருந் தமிழ்" ஆகிய நமது தாய்மொழி, ஆதியில் பரமசிவனால் தோற்றுவிக்கப் பெற்று நடைபெறும் செய்யுமொழி எனக் கூறுவர். இஃது 'தம்மலரடியொன் றடியவர்பாலத் தமிழ்ச் சொலும் வடசொலுந் தாணிழற் சேர நும் மலர்க்கொன்றை யணிந்த வெம்மடிகளச் சிறுபரக்கமதாட்கி கொண்டாரே' எனுந் தமிழ்வேதத்தானும், "ஆரியமுந் தமிழும் உடனல்கிக் காரிகையார்க்கும் கருணைசெய் தானே" எனும் திருமந்திரத்தானும், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாகத் தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" என்றும், "இருமொழிக்கருங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர்" என்றும் வரூஉங் காஞ்சிப் புராணச் செய்யுட்களானும், "தழற்பொலி விழிக்கடவுள் தந்த தமிழ்" என்னுங் கம்பர் கூற்றானும், "ஆதியிற் றமிழ்நூலகத்தியற் குணர்த்திய மாதொருபாகன்", "விடையுகைத்தவன்பாணினிக் கிலக்கணமேனாள் வடமொழிக் குரைத்தாங்கியன் மலயமாமுனிக்குத் திடமுறத்தியய மொழிக்கெதிராக்கிய தென்சொன்மடகள்" என்பவற்றானும், பிற ஏதுக்களானும் பெறப்படும்.

பரமசிவனால் ஆக்கப்பெற்றதென்று கூறுவதேயன்றி அவரால் வளர்க்கப்பட்டதென்றுங் கூறப்படுகிறது. "திரிபுரமெரித்த சடைக்கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும் அகத்தியரோடு தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார்" என்று இறையனார்களவியலுரை கூறுகிறது. மணிவாசகரும் "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுளும் உறைவான் உயர் மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்று கூறினர். "கண்ணுதற்பெருங்கடவுளும் கழகத்திருந்தாய்ந்த வீப்பகுந்தமிழ்" எனக் காஞ்சிபுராணமும், 'தண்டமிழ் நூற் புலவாணர்க் கோரம்மானே' எனத் தேவாரமும், 'சென்றணைந்து மதுரையினிற்றிருந்திய நூற் சங்கத்துளன்றிருந்து தமிழாராய்ந்தருளிய வங்கணர்' எனவும், 'சங்கப்புலவர் தந்திருமுகந் தந்தலைமேற்கொண்டு' எனவும் பெரியபுராணமும், 'பெருமைதரும் பெயர் மதுரைப் போரலவாயனென வுரைசெய்தே யவை நெடுநாளிருந்தவனவ் வபினெளிப்ப' எனப் பழைய திருவிளையாடலும் கூறுகின்றன.

இன்னும் எம் கன்னித் தண்டமிழ்ச் செய்யுட்களின் சுவை கடவுளாலும் விரும்பப்பட்டது. 'காதாரமுதம் பெறவேண்டி அன்றொரு காரிகைபாற் றூதாக நடந்தார்' என்பதாலும், "பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவை தன்பாற் றூதன்று சென்றவர்' என்பதாலும், "பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்பதாலும், "தமரீர்ப் புவனமுழு தொருங்கின்றுடடாதகாதேவி என்றொருபேர், தாங்கி வந்ததுவுந் தனிமுதலொருநீ சௌந்தரமாறனனதுவும், குமரவேள் வழுதியுக்கிரனெனப் பேர்கொண்டதுந் தண்டமிழ்ப் பெருமை கூட்டுண வெழுந்த வேட்கையாலெனினிக் கொழி தமிழ்ப் பெருமை யாரறிவர்" என்பதாலும், இன்னும் பிறவற்றாலும் அறிந்துகொள்க.

இவ்வாறு கடவுளாலாக்கப்பட்டு, கடவுளால் வளக்கப்பட்டு, கடவுளர்களால் விரும்பப்பட்ட நந்தம் செந்தமிழ் மொழியில் அவர்களால் பாடப்பட்டன வென்று கருதப்படும் கவிகள் சிலவுள. அவற்றையும் அவற்றின் நயங்களையுங் காண்டுக் காட்டுதும்:

1. இறையனாரால் பாடப்பட்டன.

அன்பி னைந்தினைக் களவினைக் கூறும் இறையனார் அகப் பொருள் இறைவராற் பாடப்பெற்ற முருக வேளால் கேட்கப்பட்டதென்பர். இதனை,

"மணிக்காலறிஞர் பெருங்குடித்
தோன்றி
இறையோன் பொருட்குப் பாணர்
முதல்கேட்பப்
பெருந்தமிழ் விரித்த வருந்
தமிழ்ப் புதல்வனும்
பாய பாரறிய நீயே
யாதலின்",

எனுங் கல்லாடத்தானும்,

"திருத்தகு மதுரை தன்னிற்
சிவன் பொருணிறுக்குமாற்று
லுருத்திரசன்மனுரியற்
றெழும் நிமலன்"

எனுங் கந்தபுராணத்தானும் கண்டுகொள்க.

பாண்டியனால் தூக்கப்பட்ட பொற்கிளியைத் தருமியென்னும் பிராமணனுக்கு உரியதாக்குவதற்காக இறைவனாரால் பாடப்பட்ட சிந்தாசமத்தி யகவல்

"நொந்துதோர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி யெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே"

இஃது குறுந்தொகையில் காணப்படுவது. மேற்கூறிய செய்யுள் பிழையுடையதெனப் பேசிய நக்கீரரை நோக்கி இறைவர் கூறிய வெண்பா:

"மூங்கம் குலுங்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால் பரப்பி—சங்கதனைக்
கீச்கீச் எனவறுக்கும் தீரனோ என்கவியை
ஆராயுமுள்ளத்தவன்"

இஃது ஒரு தனிச்செய்யுள்

பாணபத்திரனுக்காகச் சிவபெருமான் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுக அகவல்:

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவிய பானிற வரிச் சிறை
அன்னம் பயில் பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதருமாற்றம்
பருவக் கொண்மூப் படிபெனப் பாவலர்க்
கொருமையி னிருமையு முதவிய வொளி
திகழ்
குருமாமணி நிரைக் குடையத னிழற்கீழ்ச்
செருமாவுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பாலி யாழ் பயில் பாணபத்திரன்
தன்போ லென்பா லன்பன் தன்பாற்
காணபது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே"

இஃது பதினொராந்திருமுறைகளில் வரும் பிரபந்தங்களி லொன்றாயது.

திருக்குறளைப் புகழ்ந்து இறையனார்பாடிய வெண்பா:

"என்றும் புலராதியாணர்நாட்செல்லுநெறி
நின்றலர்ந்து தேனிறைக்கு நீர்மைய வாய்க்
—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் செவ்வித் திருமலர்
போன்ம்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச் சொல்."

இஃது திருவள்ளுவ மாலையிற் காணப்படுவது.

பொய்யா மொழிப் புலவர் முன்பு சிராமாலையைப்பாடிய வெண்பா:

"கோட்டாற் கொழும்பிரசங் குத்தியதனடு
வே
பாட்டாற் பணிக்கைபுகமடுத்துக்—காட்டரனை
தேனீரருந்துஞ் சிரமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை"

இஃது ஒரு தனிச்செய்யுள்.

2. முருக வேள்.

முருக வேள் பொய்யா மொழியாரைப் புகழ்ந்து பாடிய வெண்பா.

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும்
வீழ்ந்தால்
எழுந்து சுடர் சுடுமென் றேங்கிச்—செழுங்
கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்யனையும் போயி
னாள்
பொய்யா மொழிப் பகைஞர் போல்"

இஃது ஓர் தனிச் செய்யுள் சுரம்போக்கு என்னும் துறையது.

3. கலைமகள்.

திருக்குறளைப் புகழ்ந்து கலைமகள் பாடிய வெண்பா:

"நாடாமுதனூன் மறைநான் முகனுவிற்
பாடா விடைப்பாரதம் பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிவன் மீனுயர்த்த வேந்தினை வேல்வேந்
தனே
வள்ளுவன் வாய தென் வாக்கு"

இஃது திருவள்ளுவமாலையில் காணப்பட்டது. (தொடரும்.)

ஏழு தலைமுறையாய் அனுபவமுள்ள மருந்துகள்.

சமஸ்தான வைத்திய நிபுணரான சி. எம். சாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ்பெற்றவை. உண்மையான குணமுள்ளவை. உள்ளூர், வெளியூர் வாசிகளால் நன்கு மதிக்கப் பெற்றவை.

இந்தியாவில் பெரிய புகழ் பெற்றது

பெரிய நற்சாட்சி கேட்லாக் இனாம்.

நீங்கள், என்றுமழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் மகாவீரிய தங்கபஸ்பம் சாப்பிடுங்கள். கடுப்பு, பவுந்திரம், மூலம், சீரதிவு, க்ஷயம், இருமல் குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும். அழிந்ததுபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லறவாழ்வில் இன்பத்தையும் கொடுக்கத், வக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்தநாம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கிச் சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன அரிய குணங்களைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமிலரே. ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும். 24காள் பஸ்பம் விலை ரூ. 10.

நாகபஸ்பம். (மூலவியாதிக்கு) மூலம் லுன்பதும் அதிசிக்கிரம் குணமாகும். உதிரவாதமுன்ன நெற்தலுளதும். ஆரோக்கியஞ் செய்யவேண்டிய அவசியமிலரே. முனை தானே கரையும். சீழ் மூலம், இரத்தமூலம், குத்தல், மூல முனை, மலபந்தம், முதலியவை குணமாகும். புட்டி 1க்கு விலை ரூபா 4—0—0.

தாளகபஸ்பம். (இருமலுக்கு) காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, சுபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி. எட்டுவித காசமும் தீரும். 24வேளை புட்டி 1க்கு விலை ரூபா 4.

அப்ரேக் சேந்தூரம். (சீரழிவுக்கு) ஜாண்டிஸோகும் நீரையும், சீரிலுள்ள சர்க்கரைச் சத்தையும் குறைத்துத் தாகத்தை நிறுத்தித் தேக வெளுப்பை மாற்றி இரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் நீங்கும். புட்டி 1க்கு விலை ரூபா 15. தபால் சார்ஜ் வேறு.

குறிப்பு:—ஏராளமான நற்சாட்சிகளை லிபரமான கியாட்லாக்கில் பார்க்கவும். பினங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், தென் ஆபிரிக்கா முதலிய பிரதேசவாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. சிஷ்டமுள்ள பிரதேசவாசிகள் ரூபா 5—0—0 அட்வான்சுடன் ஓர்டர் அனுப்பவேண்டும்.

(Q.49. 9-5 to 8-8-35.) மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

வாலிபம் வேண்டுமா?



அப்படியெனில் இம்மருந்தைக் கொள்மின்!

வயோதிகத்திலும் பார்க்கக் கடனே உமது முகத்தைத் திரைக்கப்பண்ணிக் கிழவனாக்குகின்றது. கடினவேலையிலும் பார்க்க, பணவிஷயமான துன்பங்களே தீவிரத்தில் உமது வாலிபத்தைப் போக்குகின்றது. தேகசுகமும் மனச்சாந்தியும் நீர் பெறவேண்டுமானால், சேமநிதியிற் பணத்தைப் போடுதலால் எமக்குப் பாதுகாப்புண்டு என்ற உணர்ச்சி வரவேண்டும். அதுவே உமக்குப் பெரும்துன்ப நிவாரணமாம்.

ஆவசியக சந்தர்ப்பத்திற்கும், வருவாய் குறைந்த, அல்லது நின்றகாலத்திலும் தயாராயிருப்பது நீங்கள் எண்ணுகிறபடி கஷ்டமல்ல. உங்கள் செலவோடு செலவாய் எம்மிடம் பணத்தைச் சேமியுங்கள். நாங்கள் உதவிசெய்கிறோம்.

கோய்லன்வங்கி லிமிற்றேட்,
Y. 71 23-5 to. 22-5-36 யாழ்ப்பாணம்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணிமுக்கு கரு. சி. சொக்கலிங்கம்பிள்ளை என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏடத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

	1933-ம் ஆ அக்டோபர்மீ		
இல	உ	ரூபா	
6426	12	18	கோண்டாவில் க சிவசம்பு செட்டின் 1
	1933-ம் ஆ நவம்பர்மீ		
6730	2	225	காரதீவு வே முருகேசு இமிற்கல் பதக்கத்துடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1 கெட்டிக் காப்புச் சோடி 1
6919	20	90	காரதீவு வே முருகேசு இமிற்கல் முகப்புடன் கெட்டிகொனுசு சோடி 1
6952	22	10	கோண்டாவில் சி வேலுப்பிள்ளை இமி வெள்ளிக்கல் தோடு சோடி 1
6985	24	55	சீர்வேலி க அம்பலவர் கம்பிப்பூரான் அட்டியல் 1
	1933-ம் ஆ டிசம்பர்மீ		
7109	4	8	காவாந்துறை செ சிமியோப்பிள்ளை இமிற்கல் வளத்தோர் 1
7361	29	6	கொக்குவில் க தியாகராசா பெட்டி மோதிரம் 1
	1934-ம் ஆ செவ்வரிமீ		
7406	2	40	காரதீவு வே முருகேசு டைமன் காப்பு சோடி 1
	1934-ம் ஆ பிப்ரவரிமீ		
7720	5	25	வண்ணிமுக்கு ச திருஞானசம்பந்தபிள்ளை பொத்தல் மோதிரம் 1
7730	6	10	வண்மேற்கு ச ரெத்தினசபாபதி வைரியக்கல் மோதிரம் 1
7733	7	60	மாவிட்டபுரம் கோ கந்தையா குண்டுச்சங்கிலி 1
7792	12	6	வட்டுக்கோட்டை ச. செல்லத்துரை மோதிரம் 1
7822	15	6	சங்குவேலி சி மோனும்பிலையம்மான் மகுக்கல் காதோலை சோடி 1
7930	27	75	பறங்கித்தெரு வ இராஜகோபால் டைமன் அட்டியல் 1
	1934-ம் ஆ மார்ச்மீ		
8040	9	190	நல்லூர் வை சுப்பிரமணியம் செப்பு பச்சைக்கல் முத்துக்கட்டிய சிறிது பெரிது காப்பு சோடி 2
8041	9	135	நல்லூர் வை சுபபிரமணியம் வயிரச்சன்னம் எழுகட்டிய தோடு சோடி 1
8072	13	75	வண்மேற்கு நா செல்லத்துரை இமிற்கல் பதக்கத்துடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1
8189	25	7	புத்தூர் வி குட்டி கொப்பு சோடி 2
8192	25	16	சிவியாநெறி ச காசலிங்கம் இமிற்கல் மோதிரம் 2
8196	26	18	தெற்கன்வேளி ர ஆறுமுகம் பெட்டி மோதிரம் 1
8207	27	10	இணுவில் வை சண்வரம் ஐயர் பெட்டிமோதிரம் 1
	1934-ம் ஆ ஏப்ரல்மீ		
8274	3	10	காவற்குளி சி அப்பரபிள்ளை இமிற்கல் தோடு சோடி 1
8336	9	7	ஆரியகுளத்தடி அ ஆறுமுகம் காதுப்பூ சோடி 1
8355	10	35	சுன்னாகம் ஆ செல்லையா இமி நீலக்கல் மோதிரம் 1 விலாசம் போட்ட மோதிரம் 1
8378	12	16	சுன்னாகம் ம வெற்றிவேல் சிறுபெட்டி மோதிரம் 1 மோதிரம் 1
8466	21	35	வண்ணிமுக்கு மு தாமோதரம்பிள்ளை வயரச்சன்னம் 1 வைத்த மோதிரம் 1
8501	26	90	சங்கானை வீ பொன்னையா இமிற்கல் டிம்மியுடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1

விற்பனவு யுவவருஷம் ஆனிமீ 22-ந் தேதிக்குச்சரியான (6-7-35) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டாகை பிறசீக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏடத்தில் விற்கப்படும்.

நிலம்பிள்ளை உடையார்,
வெற்றிலைமேல்தர்,
யாழ்ப்பாணம்.

(Mis. 83 20 & 24-6-35)

மானிப்பாய் மாணவனும் நமசிவாயத்தின் கொலையும்.

அடிபிடி நிகழ்கையில் கிராமபோன் திருத்தினர்! அந்தி நேரத்திற் கத்திப் பிரயோகம்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்கு விசாரணை விபரம்.

(நமது நிருபர்.)

மானிப்பாயைச் சேர்ந்த T. செல்லத்துரை, V. இரத்தினம் என்னும் இருவரும் அவ்வூர் து. நமசிவாயம் என்பவரைக் கத்தியாற் குற்றிக் கொலைசெய்தனர் என்ற வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் ஸ்ரீ K ஆள்வாப்பிள்ளை அவர்களது முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

பொலிஸ் உபபரிசோதகர் A. J. ஏவான் வழக்கை நடாத்தினர். முதலாம் எதிரிக்காக நியாயவாதி மிஸ்ரர் S துரைச்சாமியும்,பிறக்ஸ் ஸ்ரீ R. R நல்லையாவும் 2 ம் எதிரிக்காக பிறக்ஸ் திரு S A. சபாபதியும் ஏற்பட்டனர்.

கடைக்கு முன்னால் நிகழ்ந்ததென்ன?

கொலைநிகழ்ந்த இடமாகிய கடைச் சொந்தக்காரராகிய A. சுந்தரம் என்பவர் பின்வருமாறு சாட்சியம் பகர்ந்தார். இதுசம்பவம் நடந்ததினத்தில் 4மணியளவில் நான் எனது கடைக்குள்ளே யிருந்தேன் என்னிடம் சின்னத்துரை, அமிர்தலிங்கம், சீனிவாசகம் என்பவர்களும் அங்கே இருந்தனர். அப்போது இந்த இரண்டு எதிரிகளும் வந்து தேநீர் வாங்கிக் குடித்தனர். தேநீர் அருந்தும்போது அவர்கள் கடையின் மேசைக்குச் சமீபமாகவே நின்றனர். அப்போது நமசிவாயம் என்பவர் கடைக்குள் வந்து 1-ம் எதிரியான செல்லத்துரையை நோக்கி "நீதானே நியாகுவை அடித்தவன்?" என்று கேட்டார். இத்துடன் செல்லத்துரையும் நமசிவாயமும் கைகலந்து அடிபட்டனர். இரத்தினமும் அச்சண்டையிற் சேர்ந்தார். மேசையினமேல் இருந்த கிராமபோன் ஏதோ பழுதுற்றமையால் நான் அதனைத் திருத்திக்கொண்டிருந்தேனே யன்றி அவர்களைப் பிரிக்கவில்லை. அமிர்தலிங்கம் சண்டையை நிற்பாட்டத் தேண்டித்தார்.

இதன்பின் அமிர்தலிங்கம் 'ஐயோ என்னைக் குற்றிவிட்டான்' என்று சத்தமிட்டார். நான் கிராமபோன் திருத்துவதை விடுத்து எழுந்துநின்று பார்க்கும்போது நமசிவாயம் சுவருடன் சாய்ந்து நிற்பவும் செல்லத்துரை ஓர் கத்தியுடன் கடைக்கு வெளியிற்போவதையும் கண்டேன். மணியம்வந்து 1-ம் எதிரியை மடியிற் பிடித்தார். கத்தியைப் பிடிங்கியது யார் என்பது எனக்குத் தெரியாது. 1-ம் எதிரியின் கையில் அது இருந்ததை நான் கண்டேன். நமசிவாயம் சுவரில் சாய்ந்து கீழேவீழ்ந்து இறந்தார். முதுகுப்பக்கத்திலேயே கத்திக்குற்று இருந்தது. குற்றப்பட்டபின் நமசிவாயம் ஒன்றும் பேசவில்லை. இதற்கிடையில் ஆட்கள் திரண்டுவிட்டனர். யாரோ இரத்தினத்தைப் பிடித்தனர். இறந்தவரது கையில் ஒன்றும் இருக்கவில்லை"

அடுத்ததாக P. அமிர்தலிங்கம் என்பவர் சாட்சியம் பகர்ந்தபின் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் S. நியாகராஜா பின்வரும் சருகதுப்படச் சாட்சியம் கூறினன்:

"எதிரிகள் தன்னைக் கடையொன்றின் முன்னால் மறித்தபோது தான் நிற்காமையினால், தன்னை அடித்தார்கள் என எனது மருமகன் சோமசுந்தரம் என்னும் பையன் எனக்குக் கூறினன். மே மாதம் 27-ம் தேதி இந்த எதிரிகள் இருவரையும் கல்லூரி "கேற்"றுக்குச் சமீபமாகச் சந்தித்தேன். அப்போது இரத்தினம் என்னைக் கூப்பிட்டு எனக்கும் செல்லத்துரைக்குமிடையேயுள்ள பிணக்கு என்னவென்று கேட்டார். அப்படியான பிணக்கு ஒன்றும் இல்லையென்று நான் கூறி, எனது மருமகனைத் தொந்தரவு செய்தமை செல்லத்துரைக்கு அடாது என்று சொன்னேன். உடனே இரத்தினம் எனக்கு அடித்தார். செல்லத்துரையும் வந்து அடித்தார். அவர்கள் எனது மடியிற் பிடிக்க, நான் ஓர் கடைக்குள் நுழைந்தேன். பின்னர் தெருவுக்கு வர இரத்தினம் என்னை நோக்கி, "நீ வழியில் வர செய்கிறேம் வேலை" என்றார். இதனை நான் கல்லூரிப் பிரதமாசிரியர்க்கு அறிவித்தேன்".

சோமசுந்தரத்தின் சாட்சியம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் செல்வையா சோமசுந்தரம் இதன்பின் சாட்சியம் கூறினன். அவன் கூறியனவருமாறு:

"எனது வயது 14 நான் கல்லூரிக்குப் போகும்போது இந்த எதிரிகள் கை தட்டிக் கூப்பிட்டு நிறுத்திச் சொன்னார்கள். இவர்கள் வெறியுடன்நின்றமையால் பயந்து நான் ஓடினேன்.

"கொலை நடக்க தினத்திற்குமுன் வெள்ளிக்கிழமை, செல்லத்துரை என்னைப் பிடித்து மூன்றுமுறை அடித்தார். அதுமாத்திரமன்றி "இதனைப்பற்றி யாரிடமும் சொல்வாயானால் கொலைசெய்து போடுவேன்" என்றும் பயமுறுத்தினார்."

இன்னும் சில சாட்சிகளை விசாரணை செய்தபின், நீதிபதி விசாரணைப் பிரதிகளை அற்றோர்ணி ஜெனரலுக்கு அனுப்பிவழக்கைத் தவணையிட்டார்.

"காவடியெடுத்தவரின் கதி"

13-6 34-ல் பிரசுரிக்கப்பட்ட இந்து சாதனத்தில் "காவடி யெடுத்தவரின்கதி" என்பதில் குறித்த கந்தர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் வேல் முதலியன கரம்பைத் தாக்கியபடியால் மரணமடைந்தாக அரசாங்க வைத்தியர் குறிப்புரைகூறியதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்துநாள் உபவாசமிருந்தபடியால் மலங்கழிந்ததென்றும் அதனால் இரத்தோட்டஞ் சரியாக நடவாது இரத்தாசயம் நின்றமையாலேயே மரணம் நேர்ந்ததென்றும் வைத்தியர் அவர்கள் அறிக்கைசெய்ததாகத் தெரிகிறது. ஸ்நானஞ்செய்து பிதாம்பரமணிந்து விபூதி சந்தனம் உருத்திராக்கந்தரித்து தேகமெங்கும் வேலாயுதங்கள் மின்னப் பரவசமுடையராகிச் சிவசிந்தனையோடு காவடியுடன் வீதிவலம் வந்த சிதம்பரப்பிள்ளை அவர்கள் பரங்கருணைத் தடங்கடலாகிய காவைத் தச்சன்றோப்பு விநாயகப் பெருமானது சந்நிதானத்தில் ஆனந்தக் கூத்தாடியவுடன் சீவோபதிகளைவையுமின்றிச் சனப் பொழுதிற் பூவுடலைத் துறந்தமையே பெருங்கதியாகும் என்றோர் அபிமானி எழுதுகிறார்.

சிறைத்தண்டனை.

பதுளைப் பட்டினசங்கத்தின் பழைய தலைவராகிய H. A. டீ சில்வா என்பவர், சங்கத்தலைவராயிருந்த காலத்தில், மேற்படி சங்கத்திற்குரிய பணம்187ரூபா50 சதத்தை அபகரித்தா ரென்னுங் குற்றச்சாட்டின் பேரில், பதுளைப் பெரியகோட்டில் 6 நாட்களாக விசாரணை செய்து 6 மாசக் கடுஞ்சிறை விதிக்கப்பெற்றார். அவர் இப்பொழுது அப்பீல் கேட்கின்றாராம்.

"அந்த நாயில் எனக்கு ஆசையுண்டு ஆனதால் திருடினேன்".

கறுவாக்காட்டில் வசிக்கும் மிஸ்ரர் E. K. பூத் என்பவருக்குரிய 100 ரூபா பெறுமதியுள்ள நாயை அன்டிதில் அப்பு என்னும் ஒரு ஆறுடி திருடினனெனக் கொழும்புப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிபதி குற்றத்தை திருடனைப் பார்த்து, "நீ என் அவருடைய நாயைத் திருடினாய்" என்று கேட்டபோது "ஐயா, அந்த நாயின் மேல் எனக்கு அதிக ஆசை மேலிட்டதால் நான் அதைப் பிடித்துக் கொண்டு போனேன்" என்று சொன்னானாம். வழக்குத் தவணை யிடப்பட்டிருக்கிறது.

கண்டியிற் காட்டுக்காய்ச்சல்.

முன்னர்ப் பாவியதைக்காட்டிலும் இப்பொழுது அதிகவேகமாகக் காட்டுச்சுரம் கண்டியிற் பரவிவருகின்றதாம், நோய்வாய்ப்பட்டோர்க்குச் சகாய நிதியாக கண்டி நகரசங்கத்தார் 500 ரூபா அனுமதி செய்துள்ளனர்.

யார் பொறுப்பாளிகள்?

—):×:(—

நீதிபதிகளும் அவர்களை மேற்பார்வை செய்தலும்.

பிரபலநியாயவாதியின் அபிப்பிராயம்.

நீதிஸ்தலங்களில் வியாச்சியங்கள் தீராநாட்செல்வதற்குப் பெருபான்மையும் நீதிபதிகளே காரணர் என்று, நீதிஸ்தல அமைப்பு முறை சம்பந்தமாக விசாரணை புரிந்து வரும் சபையினர்முன் மிஸ்ரர் A, L J குரூஸ் டாபிரோ என்னும் நியாயவாதி அபிப்பிராயம் தெரிவித்தார். நீதிபதிகளின் தகுதி திறமையின்மையாலே சிலவியாச்சியங்கள் அனேகவருஷங்களுக்கும் இழுக்கப் படுகின்றன. சில நீதிபதிகள் தம் கடமையைச் செய்வதில் அவ்வளவு ஊக்கமுடையவர்களாயில்லை. 12 மணிக்குள் வழக்கு விசாரணைகள் யாவற்றையும் முடிந்து வீடுசென்று உணவருந்திய பின் ஓர் கண்நித்திரை கொள்ள வேண்டுமெனபதில் மிக்க சிரத்தையுடையவராயிருக்கின்றனர். சில நீதிபதிகள் ஓர் அரசாங்கசபையங்கத்தவர் தயவில் நிற்கின்றனர்; சிலர் ஆரும் அரசாங்க உத்தியோகத்தர்க்கு அஞ்சுகின்றனர். இன்னும் சிலர் ஓர் (K. C.) இராஜா அப்புக்காத்தின் கேள்விகளுக்குப் பயமடைகின்றர். நீதிபதிகள் இனி ஓர் குறித்தகாலத்திற்கு நியக்தனையுடன் நியமிக்கப்படல் வேண்டும்.

ஏமாற்றமா?

—:0:—

அரசாங்கசபைக் காலவெல்லை நீடிப்பு.

அனுமதி வரவில்லை.

அரசாங்கசபை சட்டப்படி, இந்த ஜூன் மாதம் 23க் தேதியுடன் கலைக்கப்படவேண்டியதாகும். ஆனால் சில மாதங்களிற்காவது அரசாங்கசபையின் காலவெல்லையை நீடிக்கவேண்டும் என மந்திர நிர்வாகசபையினர் தீர்மானித்துக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு மகுச்செய்தனர் அவர்களின் கோரிக்கைக்கிணங்கிக் குடியேற்ற நாட்டு மந்திரி இன்னும் தமது அனுமதியையளிக்கவில்லை. இதனால் இப்போது மிகவும் நெருக்கடியான நிலைமை ஒன்று ஏற்பட்டுவிட்டது மந்திரசபையினர் என்செய்வது என்று திகைக்கின்றனர். குடியேற்ற நாட்டுமந்திரியின் அநுமதி கிடைக்காவிட்டால் வருகிற 23-ந் தேதியுடன் அரசாங்க சபை நிச்சயமாய்க் கலைக்கப்படல்வேண்டும்.

அக்காலத்தில் இதற்கென நியமிக்கப்பட்ட சில உத்தியோகத்தரால் இந்த நீதிபதிகளின் வேலை மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்" என்று மிஸ்ரர் குரூஸ் டாபிரோ தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

சோரவியாபாரிக்கு 1000 ரூபா அபராதம்!

12 இறுத்தல் அபினும் 12 இறுத்தல் கஞ்சாவும் வல்வெட்டித்துறை வாசியின் துணிகரம்.

மூன்று நாள் விசாரணையின்பின் தீர்ப்பு எதிரியின் உயர்தரநீதிமன்றத்து மநு.

[நமது நிருபர்]

வல்வெட்டித்துறை வாசியான இளையதம்பி இராஜதுரைப்பிள்ளை என்பவர் 12 இறுத்தல் கஞ்சாவும் 12 இறுத்தல் அபினும் சட்டவிரோதமாக வைத்திருந்தனர் என்று மதுப்பரிபாலனப் பகுதிப் பரிசோதகர் ஸ்ரீ V. பொன்னையாவினால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறைப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் மிஸ்ரர் F. S போல் முன்னிலையில் 3 நாட்களில் விசாரணை செய்யப்பட்டது எதிரிக்காக நியாயவாதிகள் ஸ்ரீ G. G பொன்னம்பலம், ஸ்ரீ C. குழந்தைவேலு என்பவர்களும், ஸ்ரீ V. S. கார்த்திகேசு, ஸ்ரீ K. மகாலிங்கம் என்னும் பிறக்ஸ்மாரும் ஏற்பட்டனர்.

காரைக்காலிலிருந்து எதிரி ஓர் தொகை அபினையும் கஞ்சாவையும் சட்டவிரோதமாக எடுப்பித்திருக்கிறார் என்பதை உளவால் அறிந்த மதுப்பரிசோதகர் பொன்னையா பொலிஸ் சார்ஜன்ற் தானியேலுடன் வண்ணச்சிலை என்னுமிடத்திற்கு மோட்டர் இரதத்திற் சென்றனர் என்றும் நடுவழியில் எதிரியின் கார்வர அதனைநிற்பாட்டிச் சோதனை செய்யும்போது அதற்குள் 12 இறுத்தல் கஞ்சாவும் 12 இறுத்தல் அபினும் காணப்பட்டனவென்றும் கூறப்பட்டது.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 1000 ரூபா அபராதம் விதித்தார்.

எதிரி நீதிபதியின் தீர்ப்புக்கு எதிராக மதுச் செய்கிறார்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின்படி லிசென்சு பெற்ற அடைவுபிடிக்கும் திரிகோணமலை 6ம் மெம்டர் காகக்கடைவீதி முருகுப்பிள்ளை இராமலிங்கம் என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைப்பி மேற்படி சட்டதின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1933ஆ 6மீ

இல.	வ.	ரூ.	சத.	நகைகளின் விபரம்
3254	1	10		நிறு இமிற்கல் தோடு சோடி 1
3257	1	15		குவளைக்கடுக்கன் சோடி1 ௯. இ.
3281	3	7		மேலிடு சோடி 1
3344	9	22	04	பூகாரி-முடன் னெமணி 4 நிறு மணி 11
3339	13	5	54	கொப்புச்சிமிக்கி சோடி 1
3401	14	7		கொப்புச்சிமிக்கி சோடி 1
3437	17	16	25	நிறுமணிக்கோர்வை 1ல் மணி20 வெ. அடுக்குக்காப்பு சோ.1௯ இ தல்லைகாப்பு 1
3571	28	6		
3588	29	9		நிறு செவ்வந்திக்தோடு சோடி1
7மீ				
3735	13	8		பி. இ. நமெமணிக்கோர்வை 1 பழுதுபின1 படக்கூர்1
3810	19	13		கு. வை. அரைப்பவுண் 1 செவ்வந்திக தோடு சோடி 1
8மீ				
5	1	7		பொன் காப்பு சோடி1 பொன் தோடு சோடி 1
233	24	33		சவலியட்டியல் 1
9மீ				
307	3	13	01	இமிற்கல் பதக்கம் 1
410	17	18		வெ பாதசரம் சோடி 1 தனிக் கூட்டுக் கோர்வை 1
10மீ				
543	3	50		நடு பதுழானட்டியல் 1
741	30	15		குப்பி சோடி 2
744	30	80		இமிற்கல் பத சல்லிப்பு அட்டியல் 1
11மீ				
846	10	13		வெ அடுக்குக்காப்பு சோடி 1
920	15	8		மோதிரம் 1
1001	25	6		இ. கல் மோதிரம் 1
1007	25	10		மோதிரம் 1
1008	26	20		கல்தோடு சோடி 1
12மீ				
1103	5	6	04	வெ தண்டை சோடி 1
1152	10	20		வெ கல் காதோலை சோடி 1 சுதேசிக்காக 1
1160	11	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
1210	17	15		வெ கல் மோதிரம் 1
1253	22	20		செவ்வந்திதோடு சோடி 1
1259	23	18		இ. கல் தோடு சோடி 1
1934ஆ 1மீ				
1434	8	14	80	வெ கல் காதோலை சோடி 1
1512	15	7		வெ பாதசரம் சோடி 1 வெ தண்டை சோடி 1
1586	22	30		பொன் தாலிக்கொடி 1
1621	26	16	04	இமிற்கல் பதக்கம் 1
1634	27	20		பொன் சறடு 1
2மீ				
1697	2	8		ஒட்டுவேலையல் 6
1708	3	30	04	காதோலை சோடி 1
1804	13	30		தங்கச்சங்கிலி 1
1913	26	7	50	இ கல் மோதிரம் 1

விற்பனவு 1935ம் ஆண்டு யுவவருஷம் ஆனிமாதம் 21க் திகதிக்குச் சரியான (5-7-35 வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடங்கி எடுபட்டநகை பிறகிழமை மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையர்,
வெந்நீர்மேன்தர்,
திரிகோணமலை.
17-6-35.

(Mis. 84 20 & 24-6-35.)

இலங்கைச் சேமநிதி வங்கி.
(Ceylon Savings Bank)

இச் சங்கத்தில் பணமிட்டிருப்போரின் வருடாந்த மகாநாட்டம், இந்த ஜூன் மாசம் 28உ வெள்ளிக் கிழமை பின்னேரம் $4\frac{1}{2}$ மணி வரையில் புதிய கவுன்ஸில்மண்டபத்திற் கூட்டப்படும்.

H. A. S. ஹமீர்,
12-6-1935. காரியதர்சி.
(G. 19. 20-6-35.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஞு ஆனிமீ சுஉ வியாழக்கிழமை.

கதிர்காமதலத்திற் பௌத்தர்பரிபாலனம்.

II

சென்ற 1933-ம் ஆண்டில் கதிர்காமத் தலத்தின் வருவாய் 2936 ரூபா 23 சதமென்றும், செலவு நீக்கி எஞ்சிய தொகை 1495 ரூபா 58 சதமென்றும் அதிகாரிகளாற் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கணக்குச் சரியானதல்லவென்றும் இதைக்காட்டிலும் கூடிய வருவாய் வந்திருக்கவேண்டுமென்றும் ஸ்ரீ இராசநாயக முதலியார் சில ஆதாரத்தோடு கூறுகிறார். சரி, உண்மையான வருவாயும் எஞ்சியதொகையுந் மேலே சொல்லப்பட்டவைகளென்றாதான் வைத்துக் கொள்ளுவோம். ஆனால் வருடந்தோறும் எஞ்சும் ஆயிரக்கணக்கான வருவாய்ப் பணத்தைக் கொண்டு மேற்படி தலத்தின் அதிகாரியாகவுள்ள நிலாமையேனும் வேறு அதிகாரிகளேனும் குறித்த கோயில் திருப்பணியில் ஏதுந் திருத்தஞ் செய்திருக்கிறார்களா? யாத்திரீகர்களின் வசதியைப் பற்றி ஏதும் மடம் சத்திரம் கட்டுவித்திருக்கிறார்களா? யாத்திரையின் பொருட்டுச் செல்வோர் காட்டுக் காய்ச்சல் முதலிய ரோகத்தினாற் பீடித்து வருந்தாது தடுத்தற் பொருட்டுச் சுகாதாரத்திற்குரிய கருமங்கள் ஏதுஞ் செய்திருக்கிறார்களா? உற்சவகாலத்திலே பல்லாயிரக் கணக்கானயாத்திரீகர் அங்குச்சென்று தங்குதற்கு ஏதும் வசதிகள் செய்திருக்கிறார்களா? யாத்திரீகர் பசி தாகமுற்றால் உணவு தண்ணீர் என்னுமிவைகளை எப்போதாயினும் உதவியுள்ளார்களா? மேலே சொல்லப்பட்ட செயல்களுள் ஒன்றினையேனும் சென்ற 500 வருடகாலமாக இப் பௌத்த பரிபாலகர்கள் செய்தறியாராமே? சைவ யாத்திரீகர்கள் கொடுத்த அர்ச்சனைப்பணம் காணிக்கை முதலிய இவைகளுள் ஒரு சதத்தைத்தானும் குறித்த பௌத்த நிலாமையானவர் அந்தச் சைவ யாத்திரீகர்கள் பொருட்டுச் செலவிடாது, கோயிற்றிருப்பணிக்குச் செலவு செய்யாது தமக்கும் தங்கிளையினர்க்கும்விலாப்புடைக்கஉண்ணவும் உடுக்கவும் இடாம்பீக வாழ்க்கை செய்யவும் அல்லவா உபயோகிக்கின்றனர்? இது பெரிய அடாத செயலன்றோ!

இப்படியென்றால், கதிர்காமத்திலுள்ள மடங்கள் சத்திரங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் வழிகள் தோறும் யாத்திரிகர்க்குத் தங்குமிடங்கள் அன்னசாலைகள் முதலிய தானங்களையும் ஏனைய சௌகரியங்களையும் யார் செய்து வருபவர் என்ற ஒரு ஆசங்கை நிகழக்கூடும். யாழ்ப்பாணம் கொழும்பு முதலிய இடங்களிலுள்ள சைவத் தொண்டர்கள் நகரத்தார் முதலியவர்களே கதிர்காமத் தலத்தைச் சூழப் பலமடங்களைத் தம் பொறுப்பிலும் யாசித்த பொருள் கொண்டும் அமைத்துள்ளனர். அந்த மடங்கள் ஒவ்வொன்றிலும் பண்ணாற்றுக் கணக்கான யாத்திரீகர் தங்குதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. திசைமகாராமாலிகிருந்தும் பத்துலாமார்க்கமாகவும் நடந்தே வரும் யாத்திரீகர்கள் நாகசாந்தி செய்தற்கும் சிறிது நேரம் தங்கிப் போதற்குமான தண்ணீர்ப்பந்தரைச் சிலசாதுக்கள் அமைத்துள்ளனர். கதிரமலைக்கு ஏறிச்செல்லும் அடியார் பொருட்டு ஒரு சாது ஏதிக செலவிட்டு ஒரு தண்ணீர்ப்பந்தரை வைத்துள்ளார். இவை மாத்திரமா? கதிர்காமத் தொண்டர் சபையார் யாத்திரீகர்கள் தங்கி இளைப்பாறிப் போதற்கான அன்னசத்திரங்களை உற்சவகாலத்திலே, கொழும்பிலும் மாத்தறையிலும் தாபித்து நடத்தி வருகிறார்கள். இன்னும் கதிர்காமதலத்திற் செய்ய வேண்டிய திருத்தங்களையும் யாத்திரீகர்க்குச் செய்யக் கூடிய வசதிகளையும் சைவமக்கள் செய்வதற்கு முற்பட்டு நிற்கிறார்களே பொழிய இத்தலத்தைப் பரிபாலிக்கும் பௌத்த அதிகாரிகளுக்கு இவற்றை நினைப்பிட்ட சிந்தனை கனவிலும் இல்லையாகும்.

ஸேர் P. அருணாசலமவர்கள் தமது குடும்பத்துடன் கதிர்காம யாத்திரை செய்யும் நியதி பூண்டுள்ளவர். அப்பெரியார் கதிர்காமாலய பரிபாலன விஷயமாகப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இலங்கையின் பூர்வ அரசராகிய துஷ்டகெமுனு கதிர்காமத் தெய்வத்தின் வரத்தைப் பெற்றதன் பயனாக அத்தெய்வத்திற்காகிய திருக்கோயிலை அமைத்து நித்திய நைமித்திகங்கட்கு வேண்டிய சர்வமானியங்களையும் ஏற்படுத்தியிருந்தார். அவருக்குப் பின்னுள்ள அரசர்களும் அத்தருமத்தை விருத்திபண்ணி வந்தார்கள்; சனங்களும் அதிக பணத்தைக் காணிக்கையாக இட்டு வந்தார்கள்; வருகின்றார்கள். ஆயினும் அக்காலத்தில் இலங்கைமன்னருடைய பரிபாலனத்திலிருந்த இத்தலம் பிருதானியர் காலத்தில் அப்படியில்லாமையினாலும், பௌத்த சமயிகளாகிய சிங்களருடைய ஆதிக்கத்திற் சிக்கியமையினாலும் மிகவும் கேவல நிலையை அடைதலாயிற்று. இத்தலத்திற்குரிய ஆதனங்கள் பல அந்நியர் கைப்பட்டன. உள்ள ஆதனங்களும் சீராகப் பரிபாலிக்கப்படுகின்றில; இப்படியிருந்தாலும் சைவமக்கள் வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கினராகச் சென்று பெருந்தொகைப் பணத்தைக் காணிக்கையாக இட்டு வழிபட்டு வருகிறார்கள்; சிங்களதலைவர் தவறான பரிபாலனத்திற்கு முடிவுநேரும் நாள் எந்நாளோ என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்."

சைவமக்களின் பிரதானதலமாகிய கதிர்காமத்தின் பரிபாலனம் இப்படிப்பட்ட ஈன நிலைமையில் இருக்கின்றது. இதனைச் சீர்ப்படுத்துவதற்கு அரசினரும் தமிழ்ப் பிரதிநிதிகளும் சைவாபிமானிகளும் ஒருங்கு சேர்ந்து முயற்சித்தல் வேண்டும். ஆனால், கதிர்காமத்தையுடைய திருவுளக்கருத்து எது என்பதை யார் தாம் அறிவார்.

அரிசி வியாபாரிகள் சூழ்ச்சி.

இற்றைக்கு ஓர் ஆண்டிற்குமுன் இங்கு இறக்குமதியாக்கப்படும் அரிசிமூடையின் நிறை 140 இறுத்தலா யிருந்தது. ஆனால் சென்ற மாதத்தில் வந்துள்ள அரிசி மூடை 120 இறுத்தல் உள்ளதாயும் இம் மாதம் வந்தது 112 இறுத்தலாயும் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கிவிட்டது. எதிர்காலத்தில் அரிசிமூடையின் நிறை 1 புசலாகிவிடுமோ என அஞ்சவேண்டியிருக்கிறது என ஓர் அபிமானி எமக்கு எழுதுகின்றார். இப்படியாக நிறை குறைந்து வருவதற்குக் காரணம் அரிசி வியாபாரிமார்க்கிடையேயுள்ள எதிரிடையேயென்று தடையின்றிக் கூறலாம். இவர்கள் எதிரிடையினால் பொதுஜனங்கள் ஏமாற்றமடைந்து நட்டமுற வேண்டியவர்களாகின்றனர்.

ஓர் வியாபாரி 120 இறுத்தல் நிறையுள்ள மூடைக்கு 7-50 சதம் சொல்லுகிறார். 116 இறுத்தல் நிறையுள்ள மூடைக்கு இன்னோர் வியாபாரி 7 ரூபா 44 சதம் விலைசொல்லுகிறார். நிறைக் குறைவின் சன்மையை அறியாத பொதுஜனங்கள் 6 சதக குறைவைப் பார்த்து 4படி அரிசி குறைவுள்ள மூடையை வாங்கி நட்டமுறுகின்றனர். 120 றுத்தல் நிறையுள்ள மூடையை இருப்பில் வைத்திருப்பவர்கள், பின்னர் மூடையைப்பிரித்து நிறையைக் குறைத்துத் தைப்பித்து 1 அணாக் குறைத்து விற்கின்றார்கள். இதனால் அவர்க்கு அதிக இலாபம் அன்றி ஊர்வர்க்கு நட்டமே ஏற்படுகின்றது.

இந்த நிலைமையை மாற்ற வழியில்லையா? அரிசி வியாபாரிகள் அரிசிமூடைகளை ஒரே நிறையில் வருவித்து விற்கவேண்டும் என அரசினர் ஓர் நியந்தனையை ஏற்படுத்தினால் என்ன? நாவிதர் சலூன்கள் விஷயத்தில் சுகாதாரம் பார்க்கும் நம் நகரசங்கம் இந்த ஆவசியகமான கருமத்தைமேற்கொண்டால் என்ன? என்று கேட்கிறோம். அரசினரும் நம் நகரசங்கமும் இவற்றைப்பற்றிச் சிந்திக்குமா?

விவாகம்.

பராஜசிங்கம்—சாரதாதேவி.

கல்லூரில் வசித்துக் காலஞ்சென்ற ஸ்ரீ K. கந்தையா அவர்கள் புத்திரன் ஸ்ரீ பராஜசிங்கம் அவர்களுக்கும், எமது இந்து சாதன மானேஜர் ஸ்ரீ ச. அட்சலிங்கம் அவர்களது இரண்டாவது புத்திரி சௌபாக்கியவதி சாரதாதேவிக்கும் நேற்று (புதன்)ப் பகல் 2 மணிவரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் உள்ள மணமகள் இல்லத்திற்றானே விவாகம் மங்களகரமாக நிறைவேறியது. தம்பதிகள் பதினாறு பேறுகளும் பெற்று இல்லறத்தை நல்லறமாய நடாத்த எம்பெருமான் நல்லைக்கந்தன் திருவருள் முன்னிற்பதாக.

கண்ணோட்டம்.

அரசாங்கசபைக் காலவெல்லை

சட்டபூர்வமாக இலங்கை அரசாங்கசபை தனது நாலுவருஷக் காலவெல்லை முடிந்ததும் வருகிற 23-ந் தேதியுடன் கலைக்கப்படவேண்டியது. ஆனால் அக்காலவெல்லையை நீடிக்கவேண்டுமெனச் சென்ற ஜனவரியில் மந்திரிசபையினர் தீர்மானித்தனர். அதற்குத் தேசாதிபதியும் இணங்கினர். ஆனால் இப்படிக் காலவெல்லை நீடிப்பதற்குக் குடியேற்றநாட்டுமந்திரியின் அநுமதி அவசியகம் தேவை. அந்த அநுமதியை இற்றைவரை குடியேற்றநாட்டு மந்திரி அளிக்கவில்லை. எனவே 23-ந் தேதியன்று அரசாங்கசபை நிச்சயமாய்க் கலைக்கப்படல் வேண்டும் எனினும் மந்திரசபையினர் ஜூலை மாதம் 9-ம் தேதி வரைக்கும் அரசாங்கசபைக் கூட்டத்தைத் தவணையிட்டிருக்கின்றனர். குடியேற்றநாட்டு மந்திரியின் உத்தரவின்றிக் குறித்தகாலவெல்லை மீறிக் கூட்டத்தைத் தவணையிடுதற்கு மந்திரசபையினர்க்கு என்ன உரிமையுண்டு என்று நாம் கேட்கிறோம்? அரசாங்கசபை என்பது ஒரு சிலரின் திருவிளையாடல்களுக்கேற்ற விடுதாசாவாகுமா? இது விஷயத்தைப் பற்றி மந்திரிமாரேனும் அரசாங்கசபை யங்கத்தவரேனும் இற்றைவரை தமது எஜமானர்களாகிய ஊர்வர்க்கு அறிவித்தனரா? ஏன் இந்த மௌனம்?

[அரசாங்கசபைக் காலவெல்லையை நீடிப்பதற்கான அனுமதி கிடைத்து விட்டதென இப்போது ஓர் செய்தி கூறுகிறது]

சுருட்டுத் தொழில்.

நம் வடமாகாணத்து மக்களுக்கு இதுகாறும் ஊதியம்பயந்துவந்த தொழிலாயுள்ள சுருட்டுத்தொழில், புகையிலைச்செய்கை என்பன எய்தியுள்ள கேவல நிலைமையைப்பற்றி இப்பத்திரிகைமூலமாகப் பன்முறை ஓலமிட்டுள்ளோம். ஆனால் எமது ஓலமும் முறையீடும் செவிடன்காதில் ஊதியசங்காகாதம் என அவமே ஆயின. மேலேசொல்லப்பட்ட தொழில்கள் இங்கே அழிந்தொழியுமாயின் நேரக்கூடிய அநர்த்தங்களோ பல. பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரக் கஞ்சிக்கும் வழியில்லாது, செய்யக்கூடிய சட்டபூர்வமான வேறு தொழில் இல்லாது சட்டவிரோதமான செயல்களிற் பிரவேசிக்கவும் கூடும் என்பதை இப்போதே எச்சரிக்கை செய்கிறோம். இதுவிஷயத்தில் ஊர்வர்கள் தகுந்த நடவடிக்கைகளைச் செய்யச் சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். அதன் பொருட்டு அரசினரும் பாராமுகமாயிருப்பது நீதியாகாது. சுருட்டுக்கைத்தொழிலை எவ்வாறு முன்னைய நிலைக்குக்கொண்டுவாரார்? என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி அரசாங்கக் கைத்தொழில் நிபுணரைக்கொண்டு விசாரணை நிகழ்த்துவித்து ஏற்றன செய்தல் வேண்டும்.

வழியில்லையா?

தென்னிந்திய வர்த்தகச் சபையினர் இந்திய அரசினர்க்கு இப்போது ஓர் மனு அனுப்பியிருக்கின்றனர். இந்தியாவில் இறக்குமதியாக்கப்பட்டு வரும் தேங்காய், தேங்காய்நெய் என்பனவற்றின்மீது தற்போதுள்ள தீர்வையை அதிகமாக்கல் வேண்டும் என அம் மனுவிற் காட்டப்பட்டிருக்கிறது. இந்த மனு யாரைத் தாக்கும் நோக்கமாக அனுப்பப்பட்டதென்று நாம் கூறுமல்ல நம்மவர்க்கு நன்கு விளங்கும். இப்போது சிலகாலமாக இலங்கைத் தெங்குப் பொருள்களின் இறக்குமதியால், எதிரிடையால் தென்னிந்தியத் தேங்காய் வியாபாரம் மிகவும் க்ஷீணநிலைமையை எய்திவிட்டது என்று இந்தியவர்த்தகர் குறையிட்டு தமது அரசினர்க்குப் பல மனுக்கள் அனுப்பி வருகின்றனர். இந்த நிலைமைக்கு இலங்கை மந்திரசபையினரும் ஒருவாறு ஜவாப்தாரிகளே என்றுகூறல்பிழையாகாது தற்பாதுகாப்பு என்ற ஓர் காரணத்தைக் கொண்டு குறித்தலை இந்தியப்பொருள்கள் மீது இலங்கைஅரசினர் இறக்குமதித்தீர்வையை அதிகரித்தமைக்குப் பின்னரே, பாரதநாடு, இலங்கை என்னும் இருநாடுகளுக்குமிடையேபரஸ்பரம்பிணக்குஅதிகப்படலாயது இந்தப்பிணக்கைத் தவிர்க்கவழியில்லையா? தொன்றுதொட்டு மிகுந்த தொடர்புகொண்டுள்ள இவ்விரு நாடுகளும் பரஸ்பரம் நேசபான்மை கொண்டு கர்மம் ஆற்றுதற்கு இரு தேச அரசியல் வாதிகளும் முயற்சிப்பாராக.

தேசிய(?)காங்கிரசின் தீர்மானம்.

தேசாதிபதியின் பாதுகாப்புக்கள். அவற்றைக்குறைக்கவேண்டும்.

லண்டன்மந்திரிக்கு மநு: அதன் விபரம்.

இலங்கைத்தேசிய காங்கிரஸ் காரியதிர்வாகசபையின் கூட்டம் ஒன்று சென்ற திங்கட்கிழமை மிஸ்டர் E. A. P. விஜயரத்தின அவர்களின் தலைமையிற் கூடியது. தேசிய மகாசபையின் சென்ற மகாகூட்டத்தில் அரசியற்றிருத்தம் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட பின்வரும் நிர்ணயங்களை ஆதாரமாகக் கொண்டே ஓர் மநுவைக் குடியேற்றநாட்டுமந்திரிக்குச் சமர்ப்பித்தல்வேண்டும் என்று இந்தநிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானமாயது:—

(1) இலங்கையின் பணப்பொறுப்புமுழுவதும் அரசாங்கசபைவசம் இருத்தல்வேண்டும்.

(2) இப்போது பிரதம காரியதரிசி போக்கிஷமந்திரி சட்ட மந்திரி என்னும் மூன்று வெள்ளையுத்தியோகத்தர் உளர். இவர்கள் அரசாங்கசபைக்குப் பொறுப்பாளிகள் அல்லர். அவர்களை ரீக்கிவிட்டு அவர்களிடத்திற்கு அரசாங்கசபைக்குப் பொறுப்பானவர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(3) உத்தியோகப் பற்றற்ற சபையினர் உத்தியோகத்தரை நியமிப்பதற்காகத் தெரிவு செய்தல்வேண்டும்.

(4) தேசாதிபதியின் யதேச்சாதிகாரங்களைக் குறைத்தல் வேண்டும்.

மலேரியாக்கொடுமை குறைகிறதாம்.

இலங்கையின் கீழ்ப்பிர தேசங்களில் இப்போது மழைபெய்யத் தொடங்கியிருப்பதால் மலேரியாவின் வேகம் மிகவும் குறைந்துவிட்டது என்று இவ்வுவரும் செய்திகளினால் அறிகின்றோம்.

ரூஷியாவும் குவெற்றுப் பூகம்பமும்.

சோவியத் ரூஷியா குவெற்றுப் பூகம்ப விபத்து நிவாரணத்தின் பொருட்டு ஆயிரம் பவுண்கள் உதவத் தீர்மானித்திருக்கிறது.

விவாகம்.

சுந்தரராஜா—சத்தியதேவி

டாக்டர் M. வெற்றிவேலு அவர்களின் இரண்டாவது புதல்வர் ஸ்ரீ சுந்தரராஜா அவர்களுக்கும் கரம்பன் ஸ்ரீ K. விஸ்வலிங்கம் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி சத்தியதேவிக்கும் சென்ற வியாழக்கிழமையிரவு விவாகம் சிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்றுவாழ இறைவன் அருள்சுரப்பதாக.

சிறந்த சங்கீத விருந்து.

—(o)—

குவாலாலம்பூர் மாணவிகளின் திறமை.

தெல்லிப்பழையிற் கச்சேரி.

(ஓர் சங்கீதாபிமானி எழுதுகிறார்)

இம்மாசம் 16க்திங்கிழமையிற்பகல் 6½ மணி தொடக்கம் 9 மணி வரை தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் குவாலலம்பூர் சங்கீத அபிவிருத்திச் சபா மாணவிகளால் ஓர் சிறந்த சங்கீதவிரிவை நடாத்தப்பட்டது. அத்தருணம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் அநேகர் சமுகம் அளித்தனர்.

6½ மணியானதும் மேற்படி சங்கீதக் கோஷ்டியை ஒழுங்கு செய்த செயலாளர்களில் ஒருவரும் குவாலலம்பூர் சங்கீத அபிவிருத்திச் சபாக் காரியதரிசியுமான திரு. ம. கந்தையா அவர்கள் இந்நாட்டில் சங்கீதத்தைப் பரவச் செய்யும் நோக்கமாகவே அன்றைய சங்கீதக் கச்சேரி ஒழுங்கு செய்யப்பட்டதென்றும், குவாலலம்பூரில் உத்தியோகம் வகித்துள்ள யாழ்ப்பாணமக்கள் சங்கீதத்தில் அதிக அபிமானமுடையராய், அங்கே யொரு சங்கீத சபாவைத் தாபித்திருக்கின்றன ரென்றும், அச்சபாவின் ஆதரவில் இதுவரை 500 மானவ மாணவிகள் கற்றுத் தேறியிருக்கின்றனர் என்றும், அவர்களிற் சிலர் பெரிய சங்கீத வித்வான்கள் முன்னிலையில் தம் திறமையைக் காட்டி அவர்களால் மெச்சப் பட்டவர்களென்றும், அவ்வித நிர்த்தி வாய்ந்த ஒரு சிலர் அன்று நடக்கப் போகின்ற கோஷ்டியில் பங்கு பற்றுவர்களென்றும், முன்னுரையாகச் சில கூறிய பின் கச்சேரி ஆரம்பமாயது.

முதலாவது, ஏழுவயதுப் பிராயமுள்ள ஒரு சிறுமியால் இனிமையான மிக மிருதுவான குரலில் யாவரும் மெச்சத் தக்கவாறு சுதியுந் தவறாமல் இரு சிறு வர்ணங்கள் பாடப்பட்டன. பின்னர் சற்றே பிராயமுள்ள மூன்றுசகோதரிகள் ஒருவரோ டொருவர் போட்டி செய்யும் பாவனையாக, ஒரே குரலில் மிக இனிமையாக வீணை வாசித்துப் பாடினார்கள். வீணைவாசித்த கன்னிகாரத்தினத்தின் கைத்திறமையையும் லாகவத்தையும் மெய்ச்சாதரிலர். அதே மாதிரியாக ஏனைய இரு சிறுமிகளும் வாய்ப்பாட்டில் அதிக திறமை காட்டினர், இம்மூவர்களுமே சங்கீதத்தில் கைதேர்ந்தவர்கள்; பரபரப்பின்றி லாகவமாகவும் இயல்பாகவும் பாடக்கூடிய தாடனம் படைத்த ர்கள் எனச் சபையிலுள்ளோர் சிலர் வியந்து கூறினர்.

மூன்றுவதாக, 13, 14, ஆட்டைப் பிராயமுள்ள ஒரு சிறு பெண்மணியால் வெகு திறமையாக மூன்று கிர்த்தனங்கள் பிடில் வாத்தியத்தில் வாசித்துக் காட்டப்பட்டன. இப்பெண்மணி குறித்த நாம் புக் கருவியில் வில்லை மீட்டி, கெம்பீரமாகப் பலத்த நாதம் பிறக்க வாசிக்குந் தன்மை யாவரையும் வசீகரிக்கும் பான்மையது.

இன்னும் சிலகாலம் செல்ல இப் பெண்மணி சங்கீதத்தில் ஓர் விற்பன்னர் எனத் தக்க திறமை யெய்துவரென அநேகர் புகழ்ந்து பேசிக் கொண்டனர். பின்னர் வாய்ப்பாட்டாகவும் மூன்று கிர்த்தனங்கள் பாடித் தமது திறமையை இவர் நிலைநாட்டினர்.

பத்துவயதுள்ள ஓர் சிறுமியால் ஹார்மோனியம் வாசித்து நான்கு கிர்த்தனங்கள் பாடப்பட்டன. இச்சிறுமியின் கானமும் வயதுக்குத் தக்க திறமையுடைத்தாய் இனிமையும் செழுமையும் நிரம்பப் பெற்றிருந்தது. கடைசியாக, 14 அல்லது 15 பிராயமுள்ள ஓர் பெண்மணி எள்ளளவும் ஓசை குன்றாது யாவரையும் வசீகரிக்கத்தக்க மிக்க இனிமையும் கெம்பீரமும் நிறைந்த குரலில் இடைவிடாது ஆறு கிர்த்தனங்களைப் பாடி சபையிலுள்ளார் அனைவரையும் மகிழ்வித்தனர்.

இவ்வளவில் வினிகை முடிவெய்தியதும், யாழ்ப்பாணம் சைவசிரிய கலாசாலை அதிபரும், சைவவித்தியாவிருத்திச் சங்க காரியதரிசியும் மயிலிட்டிக்கிராமச் சங்கத் தலைவருமான ஸ்ரீமான் சி. சுவாமிநாதன் அவர்கள் பாடசாலைத் தலைமை ஆசிரியரின் மாணவிகட்கும், அவர் தம் பெற்றோருக்கும், ஏனைய சபையோருக்கும் நன்றியறிதல் கூறி, யாழ்ப்பாணத்தார் தாய் நாட்டாராகிய இந்தியரிலும் பார்க்க எவ்விதம் சிறந்த செந்தமிழைப் பேசப் பயின்றனரோ அவ்விதம் சின்ன யாழ்ப்பாண மென வழங்கும் குவாலலம்பூரிலுள்ள தமிழ் மக்கள் பெரிய யாழ்ப்பாணத்தவராகிய இந் நாட்டவரிலும் கூடிய சங்கீத ஞானமுடையராய் விளங்குவது புதுமை அன்றெனவும், யாழ்ப்பாணத்துக்கு இதுவரையும் ஒரு பெரிய குறையாக மதிக்கப்பட்டு வந்த சங்கீத ஞானக்குறைவை சின்ன யாழ்ப்பாணமெனும் குவாலலம்பூர் மாணவிகள் நிவிர்த்தி செய்து விட்டனர் என்றும், சங்கீதத்தை இந்த ஈழநாட்டில் அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் முயலவேண்டும் என்றும் அப்படிச் செய்வதற்குச் சரித்திர சம்பந்தமான சில சௌகரியங்கள் இயல்பாக அமைந்திருக்கின்றன என்றும், உதாரணமாக சங்கீத சக்கரவர்த்தியாகிய இராவணேசுவரனால் ஆளப்பட்டதும், சங்கீதமாமா ஞானிகளாகிய ஆஞ்சனேயர், நாரதர் முதலிய பெரியோரால் தரிசிக்கப்பட்டதும், அந்தகக் கவிராயரின் யாழோசை மலியப்பெற்றதுமான இந் நாட்டில் சங்கீத ஞானம் பிறவாமற் போவதற்கு ஒரு நியாயமும் இல்லை என்றும்' பெண்மணிகளைப்போல ஆண்களும் சங்கீதக் கலையில் ஈடுபட வேண்டும் என்றும் வற்புறுத்திப் பேசினர். மேற்படி மாணவிகளால் இன்னும் சில வினிகைகள் நடாத்தப்படுமென அறிவிக்கப் பட்டதும் அன்றைய கச்சேரி அவ்வளவில் நிறைவேறியது.

இந்திய அரசியற் செய்திகள்.

அவசர அதிகாரச் சட்டம்.

விசேஷ அதிகாரச் சட்டம் டிசம்பர் மாதத்தில் முடிவடையும்போ லிருக்கின்றது. இதைத் திரும்பவும் சட்டமாகச் செய்ய அரசினர் உத்தேசித்திருக்கிறார்கள். இம்முயற்சியை எதிர்ப்பதற்காக இந்தியா சட்டசபையிலுள்ள காங்கிரஸ் கட்சியார் ராஜாராமி வருகிறார்கள் என்று தெரிகிறது. அகில இந்திய காங்கிரஸ் சபைக் காரியாலயம் எல்லாமாகாணச் சபைகளுக்கு சுற்றுக்கடிதங்கள் அனுப்பியிருக்கின்றது. அதில் சென்ற 4 வருஷங்களில் அரசினர் கையாண்ட அடக்கு முறைகள் சம்பந்தமான விவரங்களை அறிவிக்கும்படி அவை கேட்டுக்கொள்ளப்பட் டிருக்கின்றன. இந்தியா சட்டசபை விவாதத்திற்கு அவை வேண்டுமாம்.

அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கம்.

ஷெயிக்புராவிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள முராடே எனனுங் கிராமத்திலிருக்கும் 8 அறைகளைக் கொண்டதொரு பெரிய கட்டடத்தையும் 8 கானல் விஸ்தீரணமுள்ள நிலத்தையும் ஷெயிக்புரா காங்கிரஸ் சபைமூலம் அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கத்திற்கு சர்தார் மெகதாப்சிங்வீரர் என்ற ரிக்கிய நிலச்சுவான்தார் கொடுத்திருக்கிறார். அருகிலுள்ள கிராமங்கள் தோல் பதனிடுதலையும் அது சம்பந்தமான இதர கைத்தொழில்களையும் வளர்ப்பதற்கு கல்லசக்தர்ப்பங்களை அளிக்கக்கூடியனவாக இருக்கின்றன வென்றும் ஆதரவில்லாமல் இக்கைத்தொழில்கள் இப் பிரதேசத்தில் நசிந்து வருவதாகவும் இதனால் இந்த ஜில்லாவில் சங்க வேலைக்கு இத்தக் கிராமமே ஏற்ற இடமென்றும், சர்தார் மெகதாப்சிங் அபிப்பிராயப்படுகிறார். அவர் ஊழியர்களுக்கு இதர வழிகளில் தம்மாலியன்ற உதவியைச் செய்வதாகவும் தமது நேரத்தில் ஒரு பகுதியைச் சங்க வேலைக்காகச் செலவிடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அறிவித்தல்.

சண்டிலிப்பாய் மயில்வாகனம் குமாரசிங்கம் பெண் வள்ளியம்மைப்பிள்ளையாகிய நான் அறிவிப்பது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோர்ட் 5016-ம் நூலக்க வழக்கின் போரால் விலைப்படப் போகும் "அரிசிக் குருவான் தரையும் மன்னன் எல்லை பெரியான் அடைப்பும்" குறும்பத்தனையும் கொக்கிருப்பான் பிட்டி என்னும் இரண்டு காணிகளும் எனக்குச் சீவியவுரத்து இருக்கிறபடியாலும் மேற்குறித்த வழக்கின் போரல் உண்டான ஈட்டுமுறிக்கு நான் கையொப்ப காரியல்ல வென்றும், மேற்குறித்த காணிகளை வாங்குபவர்கள் என்னுடைய சீவியத்தை நீக்கி வாங்க வேண்டுமென்றும் அறிய வேண்டியது.

மேற் சொல்லியபடி சீவியத்தை நீக்கி வாங்காத பட்சத்தில் வாங்குபவர்களில் வழக்குத் தொடுக்கப்படுமென்றும் தெரிவிக்கிறேன்.

கு வள்ளியம்மைப்பிள்ளை.

(Mis 85 20-6-35)

உலக அரசியற் போக்கு

"அரசியல்வாதி" எழுதுவது.

பிரிட்டிஷ் இராச தந்திரிகள் அக்கியமை மாத்திரம் ஏமாற்றுவதில் வல்லுநரல்ல. தம்மவரையே ஏமாற்ற அவர்கள் பின்வாங்கார் என்பது, பிரிட்டிஷ் மந்திரசபை மாற்றி அமைக்கப்பட்ட தன்மையில் இருந்து நன்கு புலப்படும். இந்திய இராசப்பிரதிநிதியாயிருந்துதின் பாராளுமன்றத்தில் கல்விப் பகுதி மந்திரியாயிருந்த (இர்வின்) ஹலிபாக்ஸ் பிரபுவுக்கு யுத்த மகதிரிப் பதவியை இப்போது அளித்திருக்கின்றனர். யுத்த சம்பந்தமான பிரச்சினைகளில் எப்போதாவது ஹலிபாக்ஸ் பிரபு தமது திறமையைக் காட்டியிருக்கவில்லை நேர் மாறாக அவர் யுத்தமென்பது உலகிற்கே பெருங் கெடுதி விளைப்பது. எனவே அதனை ஒழிக்கவேண்டும் என்று பிரசாரம் புரிந்து வந்த சமாதானவாதியாவர். அத்துடன் அவர் மாபெருங் கிறிஸ்தவர். தேவாலயஞ்சென்று ஆராதனை செபம் செய்வதில் ஒருபோதுந் தவறார். அப்படிப்பட்டவரை மிஸ்டர் பால்டுவின் யுத்தமந்திரியாய் நியமித்ததன் காரணம் என்ன? அடுத்த வருடத்து வரவு செலவுத் திட்டம் இன்னும் சிலமாத காலத்தில் தயாரிக்கப்படும். பிரிட்டிஷ் அரசிறையிற் பெரும்பகுதியை யுத்தப்பகுதி விழுங்கி விடும். அப்போது பிரிட்டிஷ் பொது ஜனங்கள் ஆக்கிரமிக்கக் கூடும், அப்படி ஆக்கிரமித்தால் "நாங்கள் என்செய்வது! யுத்த மேகமோ குவிந்துவிட்டது. சமாதானப் பிரியரும் உண்மைக்கிறிஸ்தவருமான ஹலிபாக்ஸ் பிரபுவே யுத்த தளபாடங்களின் பொருட்டு இவ்வளவு பெருந்தொகையைக் கேட்கின்றார்" என்று மிஸ்டர் பால்டுவினும் அவரது கட்சியாரும், சமாதானம் சொல்வதன் பொருட்டே ஹலிபாக்ஸ் பிரபுவை யுத்த மந்திரியாய் நியமித்திருக்கின்றனர். ஆனால் நிச்சயமாகவே யுத்தம் மூண்டால் அதில் இங்கிலாந்தும் பங்குபற்ற வேண்டி ஏற்பட்டால் ஹலிபாக்ஸ் பிரபுவை பால்டுவின் கோஷ்டியினர் அப்பதவியில் வைத்திருப்பரோ எனபது சந்தேகம்.

∴ ∴ ∴

மிஸ்டர் மக்டோனல்டு தம்பதவியினின்றும் விலகும்போது கடைசியாகச் செய்த பிரசங்கத்தில் தான் தற்காலிகமாக இலேப்பாறவதாகக் கூறியிருக்கின்றார். இதன் கருத்து என்ன? மிஸ்டர் மக்டோனல்டு தாமாக பிரதம மந்திரிப் பதவியை விடவில்லை: விடுமாறு வற்புறுத்தப் பட்டார் என்பது உலகறிந்த இரகசியம். கன்ஸர்வேற்றிவ் கட்சியினர் பாராளுமன்றத்தில் அதிகாரம் வகிக்கும் வரையில் மிஸ்டர் மக்டோனல்டு இனிப் பிரதம மந்திரிப் பதவியை எட்டியும் பார்க்க முடியாது என்பது நிச்சயம். ஒருவேளை தொழிற்கட்சியின் மூலமாகவே, தான் பிரதம மந்திரியாய் விடலாம் என்று மக்டோனல்டு அவாவுறுகின்றனரோ?

∴ ∴ ∴

கிரீஸ்தேசத்தில் இப்போது ஓர் அரசியல் மாற்றம் நிகழும் நிலைமையில் இருக்கிறது. 1922-ம் ஆண்டு தொடக்கம் 23ம் ஆண்டு வரையில் அங்கு ஆட்சிபுரிந்த இரண்டாவது ஜோர்ஜ் மன்னர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். இப்போது அந்நாட்டில் முடியரசே மீண்டும் நிலவவேண்டும் என்னும் கொள்கையுடைய கட்சியார் வரவடைந்து வருகின்றனர். இன்னும் இரண்டு மாத காலத்தில் முடியரசு வேண்டுமா? குடியரசு வேண்டுமா? என்னும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிரேக்க மக்களின் வாக்குச் சம்மதம் எடுக்கப்படும். முடியரசுக் கட்சியினர் இவ்வாக்குச் சம்மத எதிரிடையில் வெற்றியுறுவர் என்று சொல்லப்படுகிறது.

∴ ∴ ∴

ஜெர்மனியின் ஆகாயவிமானப் படை அமைப்பை நேரிற்கண்ட டாமன்ட்றோ என்னும் ஆங்கிலேயச் சீமாட்டி தமது அநுபவத்தைப்பற்றிப் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார். கிளாடோவ் என்னுமிடத்தில் தினந்தோறும் 4000 பேர் இரவு பகல் என்ற பேதமின்றி ஓர் ஆகாய விமானியுத்தப் பயிற்சி நிலையத்தைக் கட்டுகின்றார்களாம். அப்படியான நிலையம் உலகின் வேறெப்பாகத்திலும் இல்லை என்பது மேடி பெண்ணின் கருத்தாகும். ஜெர்மனியின் ஆகாயப்படை மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கிற தென்றும், அப்படியான சிறந்த அமைப்பு முறையை வேறெந்த வல்லரசும் கையாளவில்லை யென்றும் கூறுகிறாள். ஆனால் ஒன்று: உலகத்து வல்லரசுகள் கூறுகிற அளவுக்கு ஜெர்மனி ஆகாயப்படையை வைத்திருக்கவில்லை என்பது அப்பெண்ணின் அபிப்பிராயமாகும். இவள் ஜெர்மன் பிரதம மந்திரியும் யுத்த அதிகாரியுமான கோயரிங் சேனாதிபதியுடனும் சம்பாஷித்திருக்கின்றாள். சம்பாஷணையின்போது ஜெர்மனியின் நிலைமையை விளக்கி கோயரிங் பின்வருமாறு கூறினாராம்!

"ஐரோப்பாவில் சமாதானம் நிலவுவதும் யுத்தம் மூள்வதும் பிரிட்டிஷாரிலேயே தங்கியிருக்கின்றன. பிரான்சை இங்கிலாந்து உற்சாகப்படுத்தவொண்ணாது. நாம் யார் மீதும் படையெடுக்கும் நோக்கம் கொண்டிருக்கிறோம் அல்ல. தற்பாதுகாப்பின் பொருட்டே நாம் ஆயுதஸ்வீகரணம் செய்கின்றோம் இது எங்கள் கடமையல்லவா?"

∴ ∴ ∴

பிரிட்டிஷ் பழைய பிரதம மந்திரியான மிஸ்டர் லோயிட் ஜோர்ஜ், இங்கிலாந்தில் வேலையின்மையைப் போக்குதற்கும், பொருளாதார நிலைமையைத் திருத்துதற்குமான ஓர் புதிய திட்டத்தைச் சிருட்டித்துப் பிரிட்டிஷ் மந்திரசபையினர்க்குச் சமர்ப்பித்தமை ஞாபகமிருக்கும். இத்திட்டம் இப்போது சிலமாதகாலமாக மந்திரசபையினரின் "பரிசீலனை"யில் இருந்து வந்ததாம். ஆனால் அது எப்போதோ மந்திரசபையினரால் குப்பைத்தொட்டிக்குள் வீசியெறியப்பட்டுவிட்டது. அதனை அங்கீகரிக்கும் மனப்பான்மை பால்டுவின் கோஷ்டியினரிடம் ஏற்கெனவே இருந்திருக்குமானால், புதிதாக அமைக்கப்பட்ட மந்திரசபையில் மிஸ்டர் லோயிட் ஜோர்ஜ்க்கும் ஓர் பதவி கிடைத்திருக்கும். இப்போது அத்திட்டம் நிராகரிக்கப்பட்டுவிட்டதென மிஸ்டர் லோயிட் ஜோர்ஜ் அறிவிக்கப்பட்டிருக்கிறார். பாவம் மிஸ்டர் லோயிட் ஜோர்ஜ்!

∴ ∴ ∴

ஆனால் மிஸ்டர் லோயிட் ஜோர்ஜ் இதன் பயனாகச் சலிப்படைந்துவிடவில்லை. அடுத்துவரும் பொதுத்தேர்தலில் தாம் ஓர் புதுக் கட்சியை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கின்றார். அதற்கு ஸ்கோடன் பிபு, சேர் பேஸில் பிளாக்கிற் முதலாம் பிரமுகர்களது ஒத்துழைப்பும் உதவியும் கிடைக்குமாம்!

∴ ∴ ∴

சீனாவை முறியடிக்க ஜப்பான் கங்கணம் கட்டிவிட்டது. யாரோ நாலு ஜப்பானிய உத்தியோகத்தரை சாகர் மாகாணத்துச் சீன அரசினர் சிறையில் இட்டுவிட்டனர். ஜப்பானுக்கு வந்தது கோபம். சுயமரியாதையுள்ள எந்தத்தேசமும் அங்கீகரிக்க முடியாத மிகப்பொல்லாத நிபந்தனைகளை ஜப்பான் சீனாவிற்கு விடுத்தது. இற்றைவரை சீனா அந்நிபந்தனைகளுக்குப் பதில் அளிக்கவில்லை. அந்நிபந்தனைகளுக் கிணங்காவிட்டால் ஜப்பான் நிச்சயமாய்ப் படையெடுத்துச் சீனாவை முறியடித்துப் பல பிரதேசங்களைத் தன்வயமாக்கிக்கொள்ளும். இணங்கினால், வட மங்கோலியாவில் ஜப்பானின் ஆதிக்கம் பெருகிச் சீன ஏகாதிபத்தியம் மிகக் குறைந்துவிடும். இப்போது சீன இராஜதந்திரிகள் இருதலைக்கொள்ளி யெறும்பின் நிலையில் இருக்கின்றனர். ஓர் சாரார் ஜப்பானின் நிபந்தனைகட்கிணங்கலாம் என்கின்றனர். இன்னோர் சாரார் ருஷியாவின் உதவியை நாடி ஜப்பானுடன் போர்தொடுக்கவேண்டுமென்கின்றனர். ஆனால் ருஷியாவின் பொதுவுடமைக் கட்சியாரைச் சீன அரசினர் இதுகாறும் அடக்குமுறைகளினால் தம் நாட்டில் அடக்கிவைத்திருக்கின்றனர். இதன் பயனாகச் சீனத்திற்கு ருஷியா உதவிசெய்யப் பின்வாங்கும் என எண்ணப்படுகிறது. இதற்கிடையில் சீன அரசினர் சர்வதேச சங்கத்தினர்க்கும் மறுசெய்திருக்கின்றனர். ஆனால் அச்சங்கம் இதுவிஷயத்தில் உதவி செய்புமா?

ஸ்ரீமதி கமலாநேரு

பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் தர்மபத்தினியாரான ஸ்ரீமதி கமலாநேரு சென்ற திங்கட்கிழமை ஜெர்மன் தலைநகரான பெர்லினை அடைந்தார். அங்கு அவர் ஓர் பிரபல வைத்திய நிபுணரால் சத்திரவைத்தியம் செய்யப்படுவார் என்று அறிகிறோம்.

எமது சமூகத்தின் எதிர்காலம்

[சென்னை கே. எஸ். நாதன்]

மனிதன் கீழ்க்கா மிருக வர்க்கத்திலின்றும் சீர்பட்டு, அக்க லவயங்கள் உருப்பட்டு பிற்காலத்தில் மனித உருவமாக மாறியவன் எனக் கூறுபோதே இவைகள் சுத்த அநீதி, மனிதனுக்கும் கீழ்க்கா மிருகத்திற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என எண்ணிவந்த காலம் சென்று இருந்து வந்தது. அக்காலங்களில் இன்றைய நவீன விஞ்ஞான முறைகளையும், அவைகளினால் ஏற்பட்டு வந்த நன்மைகளையும் மக்கள் புறக்கணித்து வந்ததோடல்லாமல் அவைகள் காட்டுமிராண்டித்தனமும், அறியாமையின் கூற்றும் என அக்காலத்து மக்கள் கருதிவந்தனர். ஆனால் இன்று அறிஞர்டார்வின் தமது இயற்கை ஆராய்ச்சியை சிரியாம்சையில் பிரயோகித்து, கல்வி அறிவுபெற்ற மக்கள் நம்புமபடியாகச்செய்த பின்னர் பண்டைய நம்பிக்கைகளுக்கும், அவர்கள் நம்பிவந்த எண்ணங்களுக்கும் பெரியதோர் மாறுதலேற்பட்டது. இதன் மூலமாகவே மனித சமூகமே குறிப்பிடக் கூறுவதற்குரியதோர் உணர்வு பெற்றதுடன் அறியாமை யினின்றும் விலகவும் முற்பட்டது. இதன் பயனாக தற்போது மக்கள் கல்வி கற்கவும் விவசாயங்களில் ஈடுபடவும், சமூக சீர்திருத்தங்களைச் செய்வதில் கவனமுள்ளவர்களாகவும் காணப்பட்டபோதிலும், இன்னும் பரிபூரணமானதோர் நிலைமையை அடையாமல் எல்லாத் தேசத்து மக்களும் தத்ளித்துக் கொண்டிருக்கின்றனர். கொடூரமான வாழ்க்கைக்குப் பின் இன்ப வாழ்க்கையைப் பெறுவது மிகவும் சகஜமாகும். இதைப் போன்றே அறிவற்ற வாழ்க்கைக்குப் பின் அறிவுள்ள வாழ்க்கை எனக் கருதியதோர் வாழ்க்கையை எய்தின போதிலும் இவ்வாழ்க்கை இன்னும் உயரிய உன்னதலட்சியத்தைக்கொண்ட வாழ்க்கையை அடையவில்லைபோலுர். இந்நிலைமையில் கஷ்டப்பட்டுன்று கொண்டிருக்கின்ற மனித சமூகத்தின் பிற்கால நிலைமை எவ்வாறு அமைத்தல் அவசியம்? எனப் பல அறிஞர்கள் நாள்தோறும் கண்ணும் கருத்துமாக ஆலோசித்து வருகின்றனர். குன்று மனிதன் சீர்திருத்தமானதோர் வாழ்க்கையை அடைந்திருக்கின்றுனெனப் புகழ்ப்படக் கூறினும் அவனுடைய அவஸ்தைகளில் சிறிதளவேனும் முற்போக்கடைந்ததாகத் தெரியவில்லை. கல்விப்பெருக்கடைந்ததென மிகைப்படக் கூறிக் கொள்ளுகின்றோமே தவிர லட்சக்கணக்கான மக்கள் கல்வி அற்றவர்களாய், எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய்த் திரிவதைக் காண எம்மனமும் பரிதாபப்படும் என்பதில் ஐயமில்லை. நிற்க, சமூகவாழ்வில் மிகப் பிற்போக்கான கருத்துக்களையும் கொண்டவர்களாக நம் மக்கள் இருக்கின்றனர். மனிதனது மானவவாழ்க்கையினின்றும், இறக்கும் தறுவாய் வரைகூட எவ்வளவோ அரிய விஞ்ஞான, அனுபவ, சித்தாந்த நூற்களைப் பயின்ற போதிலும்—கணக்கற்ற அனுபவ சித்தாந்தங்கள் தெரிந்தபோதிலும்—சமூகம் என்ற அறியாமையில் சூழ்ந்து உழலுகின்றுன் ஒவ்வொரு தேசத்திலும் நல்லொருநிதமான சமூக ஊழல்கள் நிறைந்திருந்தபோதிலும் நம நாட்டில் பாலிய விவாகம், அறியாமையாகிய ஜாதிப்பேய் போன்ற அனேக அநாகரிக வாழ்க்கை முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளை விஞ்ஞான முறை ஆராச்சிகளைக் கொண்டு நாமதகர்த்தெறிய முற்படவேண்டும். பொருளாதாரத் துறையிலோ நம் மக்கள் மிக்க கேவலமானதொரு வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். சிக்கனம் வேண்டும்-உலகெங்கும் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கின்றதெனவும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கின்றதெனவும் எங்கும் கூக்குரலிட்டபோதிலும் அவசியமற்ற வாழ்க்கைச் செலவுகளை ஒழிக்க முடியாமல் நமது மக்கள் உழலுகின்றனர். பொருளாதாரத்தில் மிகக் கேவலமாக வாழ்கின்ற இந்திய சமூகம் நாளொன்றுக்கு ஒன்றே காலணு வருமானத்துடன் வாழும் ஒரு சமூகம்- அறியாமையின் போல் அனுவசியச் செலவுகளாக மதத்தின் போலும் ஜாதியின் போலும் சடங்குகளின் போலும் கடன்பட்டாவது ஏராளமான பொருளைச்செலவழிக்கின்றதென்றால் இச்சமூக முன்னேற்றம் அடையவேண்டிய பொருளாதார முன்னேற்றத்தைப்பற்றி கூறவும் வேண்டுமா? நமக்கு அவசியாகவுள்ளவைகள் சமூக சீர்திருத்தமும் பொருளாதார முன்னேற்றமும் வாக்குரிமைச்சுதந்திரமும், செய்கைச் சுதந்திரங்களுமேயாகும். தற்காலவாழ்க்கையில் மனிதனுக்கு இவைகளில் கால் பாகம்கூட கிடைத்ததில்லை. ஆனால் பிற்கால வாழ்க்கையில் இவைகள் தானே வந்து நீரும் என்பதில் ஐயமில்லை. ஏனெனின் காலத்தின் போக்கிற்கும், மக்களின் விசேஷ தெளிவிற்கும் பொருத்தமான மாறுதல்களும் சீர் திருத்தங்களும் அமைந்துதான் தீரும். வாழ்க்கையில் பற்றுதலற்று உலகைப் புறக்கணித்தலெனக்கூறும் துறவிகள்கூட யதேச்சைச் சுதந்திரத்தைக் கோருகையில்வாழ்க்கையை உலகில் எவ்வகையிலாவது நடத்தவேண்டுமென்பதற்காக வாழும் பாமரமக்களின் தன்மையைக்கூறவும்வேண்டுமா? போனது போனபோதிலும் பிற்கால வாழ்க்கையிலாவது பிறசந்ததியார்களாவது இவ்வாழ்க்கைச் சுதந்திரங்களை அடையாமலிருக்க மாட்டார்கள். ஏனெனின் கொடூரமானவழக்கத்தையும் செய்கைகளையும் தன்மைகளையும் எப்பொழுதும் மக்கள் ஒரே நிலைமையில் ஒப்புக்கொள்வதற் கிடமாத காரியமாகும் மனிதனது பிறவியைப்பற்றி எந்தவகையில் எந்தமாதிரி நினைத்தபோதிலும் பிற்காலத்தில் எப்படி தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். இல்லையேல் மனிதன் இறந்தபின் மனிதனுடைய வாழ்க்கை எவ்வான நிலையை அடையும் என்பதிலேயே கவலை செலுத்தினால் முன்னேற்றத்திற்குரிய அவஸ்தைகள் ஏற்படா. ஆகையால் பிற்காலவாழ்வில் மனிதன் இன்புற வேண்டுமானால் அதற்குரிய வேலைத் திட்டங்களை தற்போதே செய்து முடித்தல் அவசியமாகும்.

—ஆநந்தபோதினி.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒரு பங்கு 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இதுக்கடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 137. 1-11-34 to 31-10 35.) வி.

உலகம்பலவிதம்.

—(o)—

ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள்பொருட்டு, "நாவலர் அடியான்" என்று ஒருவர் புனைபெயருடன் தோன்றி "விபரீத விளக்கம்" என்னும் மகுடநாமத்தோடு சென்ற ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையிற் சில வரைந்து வெளியிட்டுளளார். அக்கடிதத்தை அப்படியே அநுபவித்து, அடுத்த பகுதியில் வெளியிடுகின்றோம். விபரீத விளக்கத்தைத் தலையங்கமாகக் கொண்ட இந் நாவலர் அடியான், கைலாசபிள்ளையின் "பிரதம நோக்கம் யாதெனவறியாது வழிதவறி இந்துசாதனப் பத்திராதிபரால் வீண் விவாதம் கிளப்பப்படுகிறது" எனவும், பத்திராதிபர் விபரீதமாக விளங்கிகொண்டார் எனவும் அதன் பொருட்டுத் தாம் பரிதாபப்படுவதாயும் எழுதியுள்ளார்.

* * *

வீண் விவாதம்கிளப்பியதும், விபரீதமாக விளங்கியதும், இந்துசாதனப் பத்திராசிரியரா? இல்லையேல் இந்த நாவலர் அடியானு? "ஆராய்ச்சிமுறை" என்றகடிதத்திலகைலாசபிள்ளையவர்கள் இந்துசாதனப் பத்திரிகையிற் காலந்தோறும் வெளிவந்த நான்கு விஷயங்களை எடுத்துக்காட்டி அவை தவறானவையென்னுங்கருத்தமைய வெளிப்படையாக எழுதியிருக்கிறார் அவர் சொல்லுகிறபடி அவை தவறானவையாயிருந்தால், இப்பத்திராசிரியர் மேற்படி பிள்ளையின் கூற்றை ஏற்றுத் தாம் எழுதி வெளியிட்டது தவறென ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். அவை தவறல்லவெனக் கண்டால் இப்பத்திராசிரியர் அப்படி அல்ல என்பதற்குத் தக்க ஆதாரங்களை எடுத்துக்காட்டிப் பிள்ளையவர்கள் சொல்லியவைதாம் தவறானவை பத்திராசிரியராகிய தாம் வரைந்தவை தவறற்றவை எனச் சாதித்தல் வேண்டும். இவ்விரண்டனுள் இப்பத்திராசிரியர் பிந்தியதைக் கைக்கொண்டு தாம் எழுதியவை அத்தனையும் தவறல்ல நிசமேயென்று சாதித்து வருகின்றார். இப்படியிருக்க இந்த நாவலர் அடியான், பத்திராசிரியரை வீண் விவாதம் கிளப்பினுரென்றும் விபரீதமாக விளங்கினுரென்றும் சொல்வதன் நோக்கமென்ன? குறித்த பிள்ளை எதனைச் சொன்னுலும் பத்திராசிரியர் அதனைக் கேட்டுக்கொண்டு மௌனஞ்சாதிக்கவேண்டுமென்பதா "அடியான்" நோக்கம். இந்த அடியனைத்தவிர நடுவு நிலைமையோடு கூடிய வேறு எவராலும் இப்பத்திராசிரியர் வீண் விவாதங் கிளப்பினுர், விபரீதமாக விளங்கினுர் என இந்துசாதனப் பத்திராசிரியரை இவ்விஷயத்திற் சொல்லுவாரா?

"வாய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார்கண் ணதாம்....."

என்பதை இவ்வடியான் பார்த்ததில்லையா?

* * *

"மேலும் ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்களுக்கு நாவலரையாவிடமிருக்கும் மதிப்பிலும் இந்துசாதனப் பத்திராதிபருக்கு அவர்மீது கொண்டுள்ள மதிப்புக் கூடியதாகும்; எப்படியோ?" என்று நாவலர் அடியான் இப்பத்திராசிரியர் கூற்றை ஆட்சேபிக்கின்றுர். அடியான் கேள்விக்கு இந்துசாதனப் பத்திராசிரியர் பொருட்டு முருகேசுவராகிய அடியேன் தக்க விடை சொல்லவேண்டியது முறையாகும். இப்படியான வினுவை நாவலர் அடியான் என்பார் வினவி, அடியேனை விடையிறுக்கச் செய்வதால் ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கட்கு இழுக்கைத் தேடிவிடுகின்றுரேயல்லாமல் அவர்கட்கு யாதும் நன்மைசெய்திலர். ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கட்கு அடியான் செய்கை தலைப்பட்ட உதவி, இராவணனுக்கு மகோதரன் செய்த உதவிபோலவும், நாகக் கொடியோனுக்குச் சகுனி செய்த சகாயம் போலவும் ஈற்றிற் பிள்ளையவர்கட்கே அநர்த்தத்தை விளைக்குமென அஞ்சுகிறேன்; அஞ்சியுமென்! வருந்தியுமென்! நியாயங் கேட்டபோது சொல்லவேண்டியது என்கடமைதானே!

* * *

ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள், நாவலர்கள் தொடங்கி நடாத்திவந்த அரியபெரிய தருமங்களையும் தருமதாபனங்களையும் அத்தாபனங்கட்கு விடப்பட்ட பொருள்களையும் அவை தருமத்திற்குரியனவல்ல, உருமைக்காரர்களாயுள்ள தமக்கும் இன்னும் சிலருக்கும் முதுசொமாகக் கிடைக்கவேண்டியவையென்று வல்வழக்குத் தொடுத்து வாதாடினுர். இந்த உண்மையை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 56-ம் இலக்க உரிமைத் தத்துவ வழக்காலும் அக்காலத்தில் நிலவிய "சைவ உதயபானு" 1882ம் ஆண்டு ஜூலாய்மீ 24உ பிரசுரத்தில் "யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலை" என்னும் மகுட நாமத்தோடு வெளிவந்த விஷயத்தினுலும், அதே பிரசுரத்தில் வெளிவந்த யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 12732ம் இலக்க வழக்கு விளம்பரத்தினுலும் இன்னும் பிற சாதனங்களினுலும் அறியலாகும். மேலும்

"விபரீத விளக்கம்"

[நாவலர் அடியான்.]

"தற்காலத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி முறையைக் குறித்து ஸ்ரீமான் த. கைலாசபிள்ளையவர்கள் எழுதிய கட்டுரையொன்று ஈழகேசரியிலும் இந்துசாதனத்திலும் வெளியாயிற்று. அக்கட்டுரையின் பிரதம நோக்கம் யாதென வறியாது வழிதவறி இந்துசாதனப் பத்திராதிபரால் வீண்விவாதம் கிளப்பப்படுகிறது. இக்காலத்தில் ஆராய்ச்சிமுறையில் தவலயிட்டோர் பலருளர். ஆதனம் ஆதனமாக எத்தவலையோ விஷயங்களை அவர்கள் வெளியிடுவதைக் காண்கிறோம். அவர் சொல்வன, எழுதவதற்குக் கூறப்படும் ஆதாரங்கள் பல. அவை பெரும்பான்மையும் யுக்தியின் நுட்பத்தின் தோற்றமானவை, உண்மையாதென்பதை எவருமறியார். ஆராய்ச்சி செய்வோரின் விபரீத விளக்கத்தால் எழுந்த வாக்குவாதங்களும் ஆட்சேபங்களும் பல. இற்றைக்கு 55 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் கூறியதாகவும் எழுதியதாகவும் சொல்லப்பட்ட விஷயங்களிலும், அவர் இயற்றியதாகச் சொல்லப்பட்ட கல்களைக் குறித்தும் எத்தனையோ விபரீத விளக்கங்கள் பற்பட்டிருப்பதாக ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்கள் எடுத்துக்காட்டினர். சமீபகாலத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலர்விஷயத்தில் ஆராய்ச்சி முறை இவ்வளவு தவறுகவ னுடையதாயிருக்கும் போது, பல்லாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த புலவர்களைப் பற்றியும் சமய குரவர்களைப் பற்றியும் அரசர்களைப்பற்றியும் எழுதப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் எத்தனையோ தவறுகள் புகுந்திருக்குமெனச் சொல்லவும் வேண்டுமோ? இதை விளக்க வெழுந்த கட்டுரையை விபரீதமாக விளங்கி அது, இந்துசாதனத்தினை இடைவிடாது தாக்குகின்றதேயென்ற மனக்கொதிப்பினுலே பத்திராதிபர் பலவங்கூற நேர்ந்ததுபற்றிப் பரிதாபங் கொள்ளுகின்றேம் மேலும் ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்களுக்கு நாவலரையாவிடமிருக்கும் மதிப்பிலும் இந்துசாதனப் பத்திராதிபர்க்கு அவர்மீது கொண்டுள்ள மதிப்புக் கூடியதாம் எப்படியோ? நாவலர் விநாப்பத்துக்கும் நோக்கத்துக்கும் இசைய இவர்களில் எவர் தமது வாழ்க்கையைக் கடைப்பிடித்தார்? மதிப்புப்பேச்சிலா? நாவலரவர்கள் மறுபடிவந்து தான் தம்மீது இவர்கள் காட்டும் மதிப்பை அளக்கவேண்டும். மேலும் நாவலரவர்கள் மற்றையோர்மீது கலி இயற்றுவதெனக் கூறுவது இழக்கெனக் கைலாசபிள்ளையவர்கள் கூறுகிறுக்க, அப்படியவர் அபிப்பிராயப்பட்டதாக ஆராய்ச்சிசெய்து "இரங்கற்பா பாடலில்லையா?" என்று சொல்லப்படுகிறது. குறிக்கப்பட்ட கவியினை நாவலர் பாடியதன்றெனப் பிள்ளையவர்கள் கூறினுரேயன்றி பாடும் விஷயத்தில் இறங்கினுரல்லர். நாவலரவர்களின் விரிந்த மனத்தையும், பிள்ளையவர்களின் ஒடுங்கிய மனத்தையும் பத்திராதிபர் உதாரணத்தால் விளக்கின் நலம். பிள்ளையவர்கட்கு பத்திராதிபர்போல் விரிந்த மனமும் வாழ்வும் இல்லாததுபற்றி நாமும் துயரடைகின்றோம்."

—"ஈழகேசரி—16-6-35."

ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள் நாவலரவர்களின் தருமச் சொத்தாக வாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள நிலங்கள் கட்டடங்களைப் பிரசித்த எலத்தில் விற்றுரென்பதை 1886 ஆ ஆகஸ்ட்மீ 14உ வெளிவந்த கத்தோலிக்கப் பாதுகாவலன் ஆங்கிலப் பிரசுரத்தில் நாவலடியான் பார்த்து நாவலரவர்கள் மீது பிள்ளையவர்கட்குள்ள பேரபிமானத்தைத் தெரிந்துகொள்வாராக:

* * *

(*Extract from the Jaffna Catholic Guardian of August 14th, 1886*)

NOTICE.

In the District Court of Jaffna
In the matter of goods and chattles of Canthar Arumukha Navalar late of Vannarpanni deceased.
No 56.

By order of court the undersigned will cause to be sold by Public auction at the spot on Thursday the 26th inst. at 2 O. clock in the afternoon

A piece of land situated at Palai Registered in the Thombo in the names of Meenachy, daughter of Kailaya Mudaliar and others, called Puthumanatkadu and Metkumelmanatputhukkadu in extent 37¾ Lms. V. C. and bounded on the E. by the heirs of Mamikkar, N. by old road and others, W. by Valu and others, and S. by Ramanathi and others. Of this 9⅛ Lms. in common, deducting a proportionate share taken for the Govt. roads, with share of wells and palmyrahs; and on Saturday the 28th inst. at 2 O.Clock in the afternoon:

1. A house and premises situated in the 4th divison of the town of Jaffna, with well, outhouses and plantations and bounded on the E. by Bowdwyn, N. by road, W. by Justinapulle and S. by Arumukha Navalar.

2. A piece of land adjoining the above premises with house, well and plantations; and bounded on the E. by Bowdwyn, N. by Arumukha Navalar, W. by Justinapulle and south by road; in extent 2⅜ Lms V. C.

Jaffna 4th August 1886.

T. KailasaPillai
Administrator.

* * *

ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள் செய்த தருமவிரோதமான இச் செய்கைகள் நாவலரையாவிடத்து அவர் கொண்ட மதிப்பைக் காட்டுவனவா? அவமதிப்பைக் கூட்டுவனவா?

வரும்.

பிரபலஸ்தர்க்குக் கடிதம்.

("வாஸவன்" எழுதுவது.)

யாழ்ப்பாணம் நகரசங்கத் தலைவரும், சமாதான நீதிபதியும், பிறக்ஸ்டனான ஸ்ரீமான்

R. R. நல்லையா அவர்களுக்கு:—

அன்பார்ந்த ஐயா,

இந்த யாழ்ப்பாணத்தில் தம்மைப் பற்றிப் பலமான அபிப்பிராயபேதம் கிளப்பக் கூடிய ஒருவர் உண்டெனில், அவர் தாங்களே என்பதைத் தாங்களும் ஒத்துக் கொள்ளுவீர்கள். ஆனால் எவர் என்ன கூறினாலும், எவர் இழித்துரைத்தாலும், எவர் கண்டித்தாலும், "பெய்வருத் தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வேலர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி அருமையும்பாரார் அலமதிப்பும் கொள்ளார் சருமமே கண்ணுயினர்" என்றாங்கு தாங்கள் தங்கள் நகரசுகத் தலைமைப்பதவியை விடாது இருப்பதையிட்டுத் தங்களை யான் பாராட்டுகின்றேன். ஆனால் இரண்டேயிரண்டு விஷயங்களை மாத்திரம் தங்களுக்குச் சமர்ப்பிக்க அடியேன் விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்த நகரசங்கம் தங்களுக்கோ, மற்றவர்களுக்கோ சொந்தமானதல்ல: ஸ்ரீநகரம் முதுசொத்து அல்ல: ஜனநாயக ஆட்சி முறையில் எம்மைப் பயிற்றுவதற்காகவே இத்தகைய சுயாட்சி நிலையங்கள் எமக்கு ஏழங்கப்பட்டன. எனவே அவற்றிற்குத் தலைவராயுள்ளார், ஜனப்பிரதிநிதிகளின் முறையீடுகளுக்கும் சற்றுச் செவிசாய்க்கவேண்டியது அவசியமே. அன்று தாங்கள், திரு C. பொன்னம்பலம் கொண்டு வந்த 14 கேள்விகளையும் நிராகரித்தமை தங்கட்கு முறையல்ல வென்பதையும், தாங்கள் அது விஷயத்தில் யதேச்சாதிகாரமாகக் கருமம் ஆற்றிவிட்டீர்கள் என்பதனையும் தெரியத் தருகிறேன்: இரண்டாவதாக, அரசாங்க சபைத் தேர்தற்காலம் சமீபித்து விட்டது. ஓர் நகரசங்கத்துக்குத் தலைவராயுள்ள, நகரத்து மாந்தர் பலரையும் ஒரேவிதமாக, நடத்திக்கொள்ள வேண்டிய தாங்கள், "எளிய வேலை"யென ஓர்முறை ஒருவாரற் சொல்லப்பட்டதாகிய, வீட்டுக்குவீடு படலைக்குப்படலை திறந்து வாக்காளர் முன்றிலில் நின்று வாக்குச்சம்மதம் சேர்த்தல் அமுலாயிராது. சென்ற அரசாங்கசபைத் தேர்தலின்போது யாழ்ப்பாணத்தின் நடுநாயகமணியான தாங்கள் ஆட்சேர்க்கும் வேலையில் ஈடுபட்டமை தங்கள் கௌரவத்திற்கே பங்கம் விளைத்திருக்கிறது என்பதைத் தங்கள் மனச்சாட்சியே கூறும். இனியேனும் இவ் "எளிய" வேலையிற் தாங்கள் ஈடுபடாது தங்கள் மானத்தைக் காப்பாற்றுவீர்கள் என்று காத்து நிற்கிறேன்.

இங்ஙனம் தங்கள்
நன்மையையும் கௌரவத்தையும்
காக்கவிரும்பும்
—— "வாஸவன்."

இராமநாதன் கல்லூரி பழைய தலைமை பாசிரியர் திருவாளர்

C. K. சுவாமிநாதன் B. A. அவர்களுக்கு.

சிறுமியரைப் பயிற்றிய பெரியீர்,

வணக்கம்பல: ஏதோ சம்பாதித்த புகழையும் பணத்தையும் கொண்டு செத்தேன் சிவனே என்று தள்ளாதவயதில் ஓரிடத்தில் இருந்து காலத்தைத் தள்ளாது உலக விவகாரங்களில் தலையிட்டமையினால் தாங்கள் அடைந்த பயன்றான் என்ன என்று தங்களையே அடியேன் கேட்கிறேன்! ஏதோ படித்தவர், மூத்தவர் என்ற நியாயம் பற்றித் தாங்கள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் நுழைக்கப்பட்டீர்கள். அங்கு தாங்கள் தங்கள் அறிவையும் ஆற்றலையும், கல்வியையும் மூர்க்கன் கைக்கத்தியென உபயோகித்து விட்டீர்களே என்று பலர் சொல்லக்கேட்டு உண்மையிற் பரிதாபப் படுகின்றேன். அத்துடன் சென்ற ஆண்டுச் சைவவித்தியா விருத்திச் சங்க வருடாந்தக்கூட்டத்தில் தங்களுக்குக் கிடைத்த சங்மானத்தை எண்ணும்போது ஒன்றுவிறு பற்றியெரிகிறது! அந்தோடுதான் கெட்டதுகழுதை என்று இச்சங்கத்தின் விவகாரங்களிற் பிரவேசிக்காது விட்டீர்களா? சைவவித்தியா விருத்திச்சங்க மானேஜர் பணம்எல்லாவற்றையும் திருடிவிட்டார் துர்விநியோகப்படுத்தி விட்டார் என்னும் கருத்துப்பட்டச் சிலகாலமாக ஓலமிட்டுப் பின்ஒருவாறு அடங்கிஇப்போது மீண்டும் தொடங்கிவிட்டீர்கள். ஆனால் மூத்தவளே! இந்த யாழ்ப்பாணத்திலே சங்கங்கள், சபைகள் என்பனவற்றின் பிரமாணங்களையும், அவை நடாத்தப்படும் விதத்தையும் அறிந்தோர் பலர் உளர்: எல்லோரும் நிர்மூடர் அல்லர்: சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் பிரமாணங்களின்படி காரியதரிசி, தனாதிகாரி என்பவர்கள் ஒருங்குசேர்ந்து கையெழுத்திட்டால் அன்றி ஒரு பைசாவேனும் மானேஜரோ, மற்றும் யாருமோ எடுக்கமுடியாது. ஷை சங்கத்தின் பூர்வ புண்ணியத்தால் தாங்கள் கடமைபார்த்த காலத்திலேயே இக் கேவலநிலைமை ஏற்பட்டதல என்று தாங்களே கூறிக்கொள்ளுகிறீர்கள். காரியதரிசியாயிருந்த தாங்களும் தனாதிகாரியும் கையொப்பமிடாது எவ்வாறு மானேஜர் பணத்தைப்பெற்றார்? எவ்வாறு துர்விநியோகம் செய்தார்? ஸ்ரீ இராஜராத்தினம் துர்விநியோகம் செய்யும்போது தாங்களும் தனாதிகாரியும்எங்கேயிருந்தீர்கள்! ஸ்ரீ இராஜரத்தினம் துர்விநியோகம் செய்தால் தாங்களும், அக்காலத்தலைவரும், தனாதிகாரியும் அதற்குத் நணையாளிகள்என்று சொல்வதிற் பிழையா? நிலபேரைப்பலகாலத்திற்கு ஏமாற்றலாம். பலரைச் சிலகாலத்திற்கு ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எக்காலத்தும் ஏமாற்றமுடியாது "பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதை தன் சொல்லாலேதன்னைத்துயர்ப்படுத்தும்—நல்லாய்—மனனுள் மூழ்கி மறைந்து கிடக்கும் நுனலும் தன்வாயாற் கெடும்"

இங்ஙனம்,
தங்கள் நிலைகண்டிரங்கும்,
—— "வாஸவன்"

நியாயவாதியும் "Free Press" (?) பத்திரிகை ஆசிரியருமான ஸ்ரீமான்

A. V. குலசிங்கம் அவர்களுக்கு:—

அன்பார்ந்த ஐயா,

தங்கள் நிலைமையைக்கண்டு இரங்குவதா? அன்றேற் களிப்புறுவதா என்று விழிக்கிறேன்! தாங்கள் இந்த நன்றிகெட்ட பிரிட்டிஷ் அரசினர்க்குச் செய்த சேவைகளை, பணிகளை இந்தியாவில் உள்ள கல்லூரி ஆசாகான் குழுவினர் தானும் செய்திருக்க மாட்டார்கள்! யாழ்ப்பாணத்து யுவர்கள் வீர சுதந்திர தாகங் கொண்டு டொனமூர் அரசியலைப் பகிஷ்கரித்த காலத்தில், ஏகாதிபத்தியம் வீழப்போகும் சமயத்தில் தாங்கள் அல்லவா உடை நெகிழ்ந்தவன் கைபோல ஓடிவந்து அந்த ஏகாதிபத்தியத்தினதை அப்படியே தூக்கிப் பிடித்தீர்கள். பன்னூற்றுக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து ஓர் அச்சியந்திர சாலையைவாங்கி Free Press என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் "அரசகேசரி" என்னும் தமிழ்ப் பத்திரிகையையும் படாடோபத்துடன் ஆரம்பித்தீர்கள். முன்னர் கொழுப்பு "இண்டிப் பென்டன்ற்" பத்திரிகை ஆசிரியராய் இருந்த காலத்தில் கைக்கொண்ட உந்நதக் கொள்கைகளைக் காற்றிற் பறக்கவிட்டு யாழ்ப்பாண யுவர்களையும் உண்மைச் சனத்தலைவர்களையும் தங்கள் பேனுவினால் தாக்கினீர்கள். தங்கள் முயற்சியின்பயனாகவே, தாங்கள் லண்டன்சாமிக்குச் செய்த நித்திய பிரார்த்தனையினாலேயே இவ்வடமாகாணத்துக்கு ஓர் தேர்தற்றினம் குறிக்கப்பட்டது எனினும் பொருந்தும். நாம் எம் பிரதிநிதிகளை அனுப்பிச் சிங்களர் எம்மெல்லோரையும் அப்படியே விழுங்கிவிடாதபடி தப்புவிக்க முடிந்தது. ஆனால் தேர்தல் முடிந்ததும் தங்கள்கதி என்னாயிற்று? ஐயா, வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் இழந்தவள் நிலைமையை அடைந்துவிட்டீர்கள். தங்கள் பத்திரிகைள் எங்கே? இனித் தங்களையும் தங்கள் பத்திரிகைகையையும் விரும்புவார் எவருமில்லை. ஏகாதிபத்தியம் வீழ்ந்துவிடாதபடி இவ்வளவு துணிகரமாக உற்ற நேரத்தில் தூக்கிப் பிடித்தீர்களே! அதற்காகவாவது இந்தப் பிரிட்டிஷார் ஏதும் ஓர் முகாந்திரப் பட்டமாவது (வாயில்காப்போன்?) உதவியிருக்க வொண்ணாதா! அதுதான் போகட்டும்: மன்னர் பிரானது ஆட்சி வெள்ளி விழாவின்போது கண்டவர் நின்றவர் யார்க்கும் வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்பட்டனவே! அதில் ஒன்றாவது தங்களுக்குக் கிடைத்ததா? என் செய்யலாம்! இது உங்கள் தலைவிதி!

இங்ஙனம்,
தங்கள் நிலைமையை எண்ணியெண்ணி,
வருந்தும், "வாஸவன்."

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டப்சட்டத்தின்படி கொழும்பு அடைவுபிடிக்கும் திரிகோணமலை 8ம் நெம்பர் காக்கைடீவிற் வெற்றிவேறு கணகசபை, க. சிவப்பிரகாசபிள்ளை க. தியாகராசா என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1933ம் ஆ மார்கழிமீ

இல	க	ரூபா	ச	நகைகளின்விபரம்.
4939	1	8	25	இமிற்கல் வில்லுக் கடுக்கன் சோடி 1
4980	2	12	00	இமிற்கல் கவுத்தோர் 1
5039	3	16	00	இமிற் கல் காதோலை சோடி 1
5062	4	50	00	மினகுகாப்பு சோடி 1
5137	5	6	00	நிறவலையல் 6
5176	,,	12	00	ஒரு கல் செருகுதோடு சோடி 1
5225	7	15	00	வளையல் 8
5245	,,	6	00	நிற ஒருகல் செருகுதோ சோடி 1
5285	9	20	00	பூட்டுவளையல் 4
5348	10	18	00	இமிற் பதக்கம் 1
5394	11	12	00	இமிற் பதக்கம் 1 கல் 3 இல்லை
5469	13	10	00	வெ. பாதசரம் சோடி1
5501	,,	160	04	ஒருபட்டுக் குண்டுச்சங்கிலிமாலை 1 கோதம்பை டைமன்காப்பு சோடி 1
5502	14	15	00	டைமன் மினகுகாப்பு 1
5728	18	6	04	பொன்தோடு சோடி 1
5758	19	14	00	இ காதோலை சோடி 1
5767	,,	6	00	பின் கோர்க்கி 1
5897	22	7	04	வெ பாதசரம் சோடி 1
5950	24	6	50	இமிற்கல் புரேச் 1
5959	,,	20	00	கூடு 1 பழுது
6024	25	12	00	வெ பாதசரம் சோடி1 சு 1 இல்லை
6048	26	6	04	அரும்பு மணி 1க்கு மணி 27
6070	27	16	00	மு. இ. பச சவுக்கு மணிக்கோர்வை1சொப்புச்சிமிக்கிசோடி 1
6302	31	10	00	பி. இ. சவுக்கு மணிக் கோர்வை 1
1934-ம் ஆ ஜூன்மீ				
6377	1	10	00	நீலக்கல் மோதிரம் 1
6424	2	10	00	செருகு தோடுசோடி1
6489	3	10	94	இமிற்கல் மோதிரம் 1
6598	5	33	00	கு. வை. ½பவுனுடன் குண்டுச் சங்கிலி 1
6746	8	12	04	பச மணியட்டியல் 1
6818	,,	15	04	செடிக்காப்பு 1
6819	10	7	00	நிற நிருகு பூ1
7003	13	40	00	கு வைத்த பவுனுடன் சங்கிலி 1
7025	,,	7	00	நிற நிருகுபூ 1
7200	16	6	00	வெ பாதசரம்சோடி 1
7222	,,	11	00	பின்கோர்க்கி 1
7252	17	7	20	இமிற்கல்மோதிரம 1
7254	,,	80	00	இமிற்கல் பெண்டனுடன் குண்டுச்சங்கிலி 1
7331	19	6	00	காதுக்கம்பி 4
7370	20	10	00	இமிற்கல்பதக்கம்1டி இ
7538	23	6	00	கைவிலங்கு 1
7548	,,	12	00	இமிற்கல்பதக்கம்1டி இ
7653	25	30	00	டி. இமிற்கல் பதக்கம்1
7702	27	7	00	கு வை ½பவுண் 1
7827	29	20	00	காதோலைசோடி 1
7833	30	14	00	பொன் கம்பிபூரான் அட்டியல் 1
1934-ம் ஆ மாசிமீ				
7924	1	11	00	தங்காப்புசோடி 1
7987	2	11	00	சிலப்பு கடுக்கன்சோடி1
7988	,,	17	00	நீலக்கல் மோதிரம் 1 இ கல் புரேச் 1 நிற மோதிரம் 1
7989	,,	9	00	கு வை ½பவுண் 1குவை பிறைசூடிப்பவுண் 1 ½பவுண், 1 இமிற்கல் கவுத்தோர் 1
8013	3	18	00	
8027	,,	6	00	வளையற்கட்டுத் தண் டு 6 மு 8
8050	,,	22	00	இமிற்கல் பதக்கம் 1
8069	4	30	04	முத்துப்புரேச் 1 இ கல் நிருகுபூ காப்பு 1
8137	5	12	00	வெ பாதசரம் சோடி 1 வெ குளன்காப்புசோடி1 க. இ.
8138	,,	10	00	உட்கட்டு1க்கு தட்டு21
8275	9	7	00	நிற நிருகு காப்பு 1
8375	12	21	04	செடிக்காப்பு 1
8377	,,	8	04	கல் மோதிரம் 1 கல்1 இ
8386	,,	12	00	ஒருகல் செருகு தோடு சோடி 1
8446	14	75	00	2பட்டுக்குண்டுச்சங்கிலி மாலை1 கொ. வி. இ கல் மாலைப் பதக்கம் 1
8459	14	6	00	கொப்புமிக்கிசோடி1
8471	14	6	04	நிற நிருகுபூ 1
8477	14	25	04	வெ கல் புரேச் 1 இ கல் புரேச் 1
8478	14	300	04	மினம்பூக் சொடி 1
8487	15	80	04	மினகு காப்புசோடி 1 இமிற் கல் மோதிரம் 1 5 விலாப்படக்கர் 1
8549	17	12		சவடி மூலப்பு 1
8555	17	275	04	சிலப்புக்கல் அறைக் காப்பு சோடி 1, முறி பத கல்லட்டியல் 1
8640	18	13		டி. இமிற்கல்பதக்கம்1
8645	18	23		சங்கிலி 1
8662	19	6	04	நிற நிருகுபூ 1
8684	19	10		ஒற்றைக்கல செருகு தோடு சோடி 1
8704	20	5	25	முத்துக் கவுத்தோர் 1 காப்பு வெள்ளி
8752	22	13		தங்கக்காப்பு 1
8798	23	9		இமிற்கல் கடுக்கன் சோடி 1
8884	26	7		மெழுகுகுலை சோடி1, முத்து சோடி 1
8885	26	28		பட்டக்காப்பு சோடி 1
8950	28	10		தோடு சோடி 1
1934ம் ஆ பங்குனிமீ				
8979	1	14		பாம்புமோதிரம் 1
8996	1	50		குண்டுச்சங்கிலி மாலை1
9041	3	7	50	மோதிரம் 1
9063	4	6		நிற நிருகுபூ 1
9196	5	15		வெ பாழிய பாதசரம் சோடி 1
9185	7	10		பொகுதோடு சோடி 1
9225	8	55		மு வேலை பவுனுடன் குண்டுச் சங்கிலி 1
9271	10	90	04	இமிற்கல் பத எல் சட்டியல் 1
9313	11	8		இமிற்கல் முகப்பு 2
9314	11	110		சங்கிலிக்கொடி 1 பி இ
9333	12	15		இமிற்கல் காதோலை சோடி 1 பி இ
9358	12	45		டைமன்காப்பு 1
9359	12	50		டைமன்காப்பு 1
9363	13	17		இமிற்கல் பதக்கம் 1
9371	13	6	04	சொப்புச் மிக்கி சோடி 1
9374	13	10		இமிற்கல் புரேச் 1
9403	14	50	04	காதோலை சோடி 1, கல் மோதிரம் 1, இ கல் புரேச் 1
9414	14	14		இமிற்கல்பின் 1
9448	15	12		பதசவுக்குமணிக்கோ 1
9486	17	8		ஒருகல்செருகுதோடுசோ 1
9498	,,	12		கல காதோ சோ1
9549	19	13		பச சவுக் மணிகோர் 1
9611	20	8		நிறசொப்புமிமிசோ 1
				வெள்மட்ட மணி 27
9620	,,	6		வெ பதக்கம் சோடி 1
9624	,,	6	04	கல் நிருகுபூ1 கல்பின்1
9628	,,	30	04	½பவுனுடன் உவாட்ன் சங்கிலி1
9654	21	10		இ கல் கவுதோர் 1 கொப்புச்மிக்கிசோடி 1 இல்கறீனப்பூ சோ1
9659	,,	12		இமிற்கல் கவுதோர் 1
9668	,,	25	04	செடிக்காப்பு 1
9692	22	150		முடிச்சுக்குத்திசொடி 1
9718	23	9		சொப்புச்மிமிசோடி 1
9846	27	100		பதக்கம்பிப்பூராஅட் 1
9892	28	11		நிற 1கல் செருகு தோ சோடி 1 வெ கா கவு 1
9908	29	25		கல் கவுதோர் 1
9918	,,	20		மோதி1 இ கல்காதோலை சோடி 1
9924	,,	36		வெ பாதசோடி 2
9959	30	50		இ கல்பென்டனுசெ அ 1
9960	,,	16		கொக்கினுடன் கு வைப1
9965	,,	300		ஒப்பிக்காப்புச் சோ 1 கு வை 20 டலர்1 கு வை 5 டலர்3 பெண்டன்3

விற்பனவு: யுவ வருஷம் ஆனி மாதம் 18ம் தேதிக்குச் சரியான (2-7-35) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஈபேட்டாகை பிரசிகலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசவநாத உடையார்,
வெந்நீரு மேன்தர்.

(Mis. 82. 17 & 20 6 35)

சில்லாலை முத்துவைத்தியசாலை வைத்திய விளம்பரம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

நமது வைத்தியத்தைப்பற்றி அறிந்தோர் பலரும் நம் சுதேசபிமானியே சில்லாலை ஆயுர்வேத வைத்தியர் என்பதைச் சிந்திக்குமிடத்து மிக்க ஆநந்த—செ காருண்ணிய பரோபகார உத்தமர் என்பதைப் போற்றி ஏற்றி மகிழுவார்கள். ஏனெனில் இந்த பல தலைமுறை வைத்தியம், இலங்கா மல்லையின் முதன்மை பெற்ற வைத்தியம், அரசினராலும் கல்விமான்களாலும் மற்றெல்லாராலும் ஏற்றிப் போற்றப்பட்ட வைத்தியம். இதனை நன்கறிந்த தெல்லியம் பதி வாசகரும் நம் வைத்திய உதவி கம்பதியில் நிலவச் செய்யுமாறு விநயமாய்க் கேட்டுக் கொண்டமை பற்றி அதன் நினைச்சாலையாக ஒன்றை அங்கு ஸ்தாபனம் பண்ணி, தினமினம் அங்கு சாயந்தரம் 3 மணி தொடக்கி 6 மணி வரையும் நமது வைத்தியத்தை நடத்தத் தீர்மானித்திருக்கின்றோம். நோயாளர் குறிக்கப்பட்ட நேரத்துள் வந்து தரிசனை செய்வதால் மிக்க நன்மை உண்டென்பதை சண்டு சொல்லத் தேவையில்லை.

ஜீவனுக்கு ஆதாரம் நல்லிரத்தமே. நல்லிரத்தமின்மையாலே உண்டாகும் எல்லா நோய்களையும் ஒருங்கே நீக்கும் பெற்றி வாய்ந்த அவுடதங்களே இங்கு இருப்பதால் எவர்க்கும் இவ்வைதியசாலை ஜீவகாருண்ணியசாலை யெனவும் பகருதல சாலச் சிறப்புடையதேயாகும்.

தமிழ் வைத்தியத் தாயை ஆதரிப்பது
உங்கள் கடனே!

அ. செபஞ்சியாம்பிள்ளை,
அரசினரின் அங்கீகாரம் பெற்ற
(முத்து)வைத்தியர்.
தலைமை வைத்தியசாலை,
கண்டிக்குளி கதிரேசர்க்க அச்சியெந்திரசாலைக்கு
முன்பாக, பெரியதெரு,
யாழ்ப்பாணம்.
நிலைவைத்தியசாலை, தெல்லிப்பளை
அமெரிக்கன் மிஷன்பாடசாலை
முன்பக்கம்,

(Mis 80. 13-6 to 24-6-35)

சோதிஷ்காமகிரியி னறிக்கை.

சமயாபிமான சீலர்களே!

தக்ஷிணகைலாயம் என வழங்கும் ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பகதர்குழாங்கள் மலைப் பிரதிஷ்டையம் புரிவது மிகவும் அபூர்வமான காரியமாயிருந்த மையால் ஸ்ரீ ஸ்கந்தமூர்த்தியினருளால் சென்ற 1927-ம் ஆண்டில் மறைந்திருந்த பாதையைத் திருத்தலானேன். அந்நாட்டொடக்கம் யாத்திரிகர்களின் தாகசாந்தியின் பொருட்டு அச்சிகரத்தே ஓர் தண்ணீர்ப்பந்தரையுமமைத்து அல்லது பல புண்ணிய சீலர்களினது முக்கத்தால் வருடாவருடம் செவ்வனே நடைபெற்று வந்தது. சென்ற வருடம் (1934) ஆடி மகோற்சவ 15 தினங்களிலும் மானிக்க கங்கையிலிருந்து ஒரு தகரம் தண்ணீர் 40 சதவீதம் எடுப்பித்து இவ்வறனை வழுவாது கடைப்பிடித்தேன். இவ்வருடமும் இத்தர்ம கைங்கரியத்தை இடையூறின்றி நடாத்தப் போதிய பண மின்மையால், சைவாபிமானிகளனைவருமீடுபட்டு இத் திருத்தொண்டைப் பூர்த்தி செய்து வைக்குமாறு தங்கள் அடியனிர்து வேண்டிக்கொள்ளுகின்றேன். சைவசமய வைகதாக விருப்பார்களேயானால் யாத்திரீகர்களது தாகத்தைச் சாந்தி செய்யும் பொருட்டு இத்தண்ணீர்ப் பந்தரை யேற்றுத் தாகங்களை நடாத்துவார்களாக! அனேக சைவாபிமானிகள் இத் திருத்தொண்டி லீடுபடப் பின்வாங்குகின்றார்கள். அந்தோ அவர்களது பக்தியின் மாண்புதானென்னே!

ஸ்ரீ ஷண்முகப்பெருமானைப் பிரார்த்தித்து ஏதேனும் பணம் வைத்திருப்பவர்கள் அல்லது யாத்திரீகர்பணியிலும் தொண்டர்பணியிலும் பற்றுடையோர் தங்கள் தங்களாலியன்ற பண உதவி புரிந்து இறைவனருளைப் பெற்றுய்வார்களாக!!

பணத்தைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனி ஓடர் அல்லது போஸ்டர் ஓடர் மூலமனுப்பவும்.

ஸ்ரீ கதிரமலை அடியான்
ரமணை—ரங்குசாது
கதிர்காமம், நிசைமகறும.

21—4—35
(Q. 50. 25-4 to 24-7-35.)

பவுண்மார்க் ஓடுகள்.

மலிவு நிறைந்த — போலிவு நிறைந்த
அழகு மிக்க — புகழ்வு மிக்க
ஒசை கொண்ட — உயர்வு கண்ட
கனங் குறைந்த — காய்வு தந்த
கசிவில்லாத — சூடு கொள்ளாத
பவுண்மார்க் — ஓடுகள் இவைகளே.

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிஏசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.

சப் ஏசண்டுகள்: சி. க. ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பியோ, ஊர்காவற்றுறை.

N. B. மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்.
மற்றெவரிடத்தும் இந்த ஓடுகள் இல்லை.

Phone No 93.
(Y. 57. 1-5-35 to 30-4-36)

இச்சன்மானங்களில் எது வேண்டும்.

ஸால் அடையாளமிடப்பட்ட மோல்ற்றட் பால் பேணிகள் அல்லது போத்தல்களில் உள்ள லேபிள்களை எறியாது, அவற்றைச் சேமித்து, எமது சன்மானப் பொருள்களின் விபரங்கள் அடங்கிய நூலில் இருந்து உமக்குத் தேவையான சன்மானத்தைத் தெரிந்து எடுக்கவும். அப்புத்தகத்திற்காக கூப்பன் கீழே யிருக்கிறது. இதிற் சிக்கல் முக்கலான, அல்லது கஷ்டப்பட்டுக் கணக்குப்பார்க்க வேண்டியது ஒன்றும் இல்லை. 2 பெரிய லேபிள்களுக்கும் சன்மானம் உண்டு.

ஸால் அடையாளம் இட்ட மோல்ற்றட் பால்

தேகபுஷ்டிக்கானதும், தெகியில் ஜீரணிக்கத் தக்கதுமான, ருசியான சத்துக்களைக் கொண்டது. சுடு நீரில் அல்லது தண்ணீரிற் கரைத்தால் அது ஓர் சிறந்த பானமாகும். திறமான பாலில் இருந்து தயாரிக்கப்பட்டது. மோல்ற்றட்பாளி, கோதுமை முதலியவற்றின் தேகபுஷ்டிக்கான சத்துக்களை இப்பால் தன்னகத்துட் கொண்டது. மலிந்த விலையில் உள்ள பாலினங்களில் ஸால் அடையாளமிடப்பட்ட மேல்ற்றட் பாலே மிகச் சிறந்தது.

SAL BRAND **MALTED MILK**

To Sal Brand Gift Department
P. O. Box 367, Colombo
சன்மானங்கள் அடங்கிய பெற்றோர் சகிதமான தங்கள் தெ னக்கு இலவசமாகத் தயைசெய்து அனுப்பவும்.
பெயர்:.....
விலாசம்:.....

ஸால் அடையாளமிடப்பட்ட பால் உபயோகிப்பவர்களுக்குக் கிடைக்கும் சன்மானங்களில் இவை சில. ஊற்றுப் பேனாக்கள், மணிக்கூடுகள், கமிராக்கள், சிராம போன்கள், துவிச்சக்கர வண்டிகள், கொஞ்ச லேபிள்களுடன் இத்தகைய சன்மானங்களைப் பெற நீங்கள் ஆனந்தமடைவீர்கள்.

தற்போது கடைகளில் விற்கப்படும் மோல்ற்றட் பாலினத்தில் விலையிற்குறைந்த, குணத்திற் சிறந்தது. ஸால் அடையாளமிடப்பட்ட மோல்ற்றட் பாலே.

Mis 40. 17-6&27-6-35.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சுலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தரவாரி, நீர்முஸ்லிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியததைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
கரவெட்டி வடக்கு,
மட்டக்களப்பு.

(Y. 55 1-1-34 to 31-12-35) சிலோன்

கோடைகாலத்திற் பிடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒரு போத்தல்
லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்
தைலத்தை
வாங்கி வைத்திருங்கள்
இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்.
(Y 6 1-1-34—31-12-35)

பிறர்க்கின்னாமுற்பகல்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றானே வரும்.

வான்முகில்வழாதுபெய்க மலிவளந்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்க்கள்வாழ்க, நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday the 20TH JUNE 1935.